**<u>அல்-குலபாஉர்-றாஷிதூன்: பணிகளும் முன்மாதிரிகளும்:-</u>**

இஸ்லாம் இறுதி மார்க்கம் என்ற வகையில் நபி (ஸல்) அவர்கள் காலத்திலேயே மனித வாழ்வுடன் தொடர்புடைய அத்தனை நடைமுறைகளுக்கும் வஹியின் வழிகாட்டலுடன் அத்திவாரம் இடப்பட்டுவிட்டது. தமக்கு வழங்கப்பட்ட பாரிய பொறுப்பினை மிகக் குறுகிய காலமாகிய இருபத்துமூன்று வருட எல்லைக்குள்ளேயே செவ்வனே நிறைவேற்றி முடித்த நபி (ஸல்) அவர்கள், தனக்குப் பின்னால் ஒழுக்கமும் கட்டுப்பாடும் நிறைந்த ஒரு சமூகத்தை உருவாக்கிவிட்ட திருப்தியுடன் தனது மறுமைப் பயணத்தினுட் பிரவேசித்தார்கள்.

மிகக் குறுகிய காலத்தினுள் ஏற்பட்ட சடுதியான இந்நிகழ்வு, இஸ்லாமிய சமூகத்தைச் சூழவிருந்த மிகப் பலம் பொருந்திய சவால்களை வெற்றிகொண்டு இறைவேதத்தையும் அதன் தொண்டர்களையும் நபியவர்கள் விட்டுச்சென்ற இடத்திலிருந்து அழைத்துச் செல்லும் மாபெரும் சுமையை நபியவர்களின் பாசறையிற் பயிற்சி பெற்ற உத்தமத் தோழர்களின் தோள்களிலேயே விடப்பட்டிருந்தது. வெளிச் சவால்கள் மட்டுமன்றி தம் சொந்தமண்ணும் சுற்றுச்சூழலும் கூட குழப்பமேற்படுத்தத் துவங்கியிருந்தது. இந்நிலையிற் தம்மை செம்மைப்படுத்திய தலைவரையும் அவர்விட்டுச் சென்ற பணியையும் உளமாற நேசித்த அந்த உத்தமத் தோழர்கள் தம்முன்னாலுள்ள பொறுப்புக்களை சரிவர அடையாளங் கண்டு, தம்மை அதற்காகவே அர்ப்பணித்தனர். அவர்களில் முன்னணி வகிப்பவர்கள் இந்த குலபாஉர்றாஷிதூன்களே என்பது உண்மை. இது முஸ்லிம்கள் அனைவராலும் சான்றுபடுத்தப்படும் விடயமாகும்.

இந்த வரிசையில் அனைத்து ஸஹாபாக்கள் மத்தியிலும் அதிவிசேடம் பெற்றிருந்த முதற் கலீபாக்களின் சமய, சமூக, அரசியற் பங்களிப்புக்களை மீட்டி அதனை முன்மாதிரியாகக் கொள்வது முஸ்லிம்களாகிய எம்மனைவருக்கும் இன்றியமையாததாகும்.

1. **முதற் கலீபா அபூபக்ர் ஸித்தீக் றழியல்லாஹு அன்ஹு அவர்களது:** (இஸ்லாத்திற்கும் கிலாபத்துக்குமான பணிகள்).

ஜாஹிலிய்யக் காலத்தில் ஒரு சிறந்த வர்த்தகரும் செல்வந்தருமான அபூபக்ர் (றழி) அவர்கள் தனது சமூகத்தில் மதிக்கப்படும் தலைவர்களுள் ஒருவராகக் காணப்பட்டார்கள். நபி (ஸல்) அவர்கள் இஸ்லாத்தைப் பற்றி எடுத்துக் கூறியபோது தமது சமூகத்தில் தனக்கிருக்கும் அந்தஸ்தும் தனது இஸ்லாமியப் பிரவேசத்தால் எவ்வாறான பிரச்சினை களுக்கு முகம் கொடுக்கவேண்டியேற்படும் என்பவற்றைப் பற்றியெல்லாம் ஏறெடுத்தேனும் பார்க்காது அதே நொடியில் நபியவர்களின் கரம் பற்றி அவர்களின் தூதுத்துவத்தை உறுதி செய்தார்கள், இந்த வகையில் சுதந்திர ஆண்களுள் முதன் முதலில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்கள் என்பது வரலாற்றாசிரியர்கள் அனைவரதும் ஏகோபித்த கருத்தாகும்.

வரலாற்றாசிரியர் இப்னு ஹிஷாம் தனது நூலில்: ‘‘நான் இஸ்லாத்தின் பால் அழைக்கும் வேளை எல்லோருமே ஒரு வகைத் தயக்கம் அச்சம் தடுமாற்றத்துடனேயே எதிர் கொண்டனர், ஆனால் அபூபக்ரைத் தவிர என நபி (ஸல்) அவர்கள் ஒரு முறை

கூறியதைக் குறிப்பிடுகின்றார். மற்றுமொரு சந்தர்ப்பந்தத்தில்: உமர், அபூபக்ர் (றழி) ஆகிய இருவருக்கு மிடையில் ஏற்பட்ட ஒரு சிறிய தகராறில் இருவரும் நபி (ஸல்) அவர்கள் முன்னிலையில் ஆஜரான போது நபியவர்களின் முகம் சிவந்து கோபம் வெளிப்பட்டது, இதனை அவதானித்த அபூபக்ர் (றழி) அவர்கள் அச்சத்தால் அப்படியே மண்டியிட்டு உட்கார்ந்து நபியே நான்தான் அவருக்கு அநியாயம் செய்தேன் எனக் கூறினார்கள். அப்போது அங்கிருந்தவர்களை விளித்த நபி (ஸல்) அவர்கள், அல்லாஹ் என்னைத் தூதராக உங்களிடம் அனுப்பிய வேளை எல்லோருமே என்னைப் பொய்யன் என்றீர்கள் ஆனால் அபூபக்ர் என்னை உண்மைப் படுத்தினார், அவரது உயிரையும் பொருளையும் எனக்காக அர்ப்பணித்தார், அவ்வாறிருக்க எனது நண்பரை என்னிலிருந்து பிரித்து நோக்குகின்றீர்களா? என இருமுறை வினவினார்கள். இந்நிகழ்வின் பின்னர் யாருமே அவர் புண்படுமளவு நடந்து கொள்வதில்லை என அபுத்தர்தா (றழி) அவர்கள் குறிப்பிட்ட ஸஹீஹான அறிவிப்பு பிதாயா வந்நிஹாயாவில் இடம் பெற்றுள்ளது.

**இஸ்லாத்திற்காக அபூபக்ர் (றழி) அவர்கள் மேற்கொண்ட பணிகள்:-**

இஸ்லாத்தின் அறிமுக தினத்துடனேயே தன்னை அதனுள் இணைத்துக் கொண்ட அபூபக்ர் (றழி) அவர்கள் அன்று முதலே தனது அர்ப்பணிப்புக்களையும் ஆரம்பித்து விட்டார்கள். அன்று மாலைக்குள்ளேயே தன்னுடன் மிக விசுவாசமான சமூக அந்தஸ்துக் கொண்ட சிலரை நபியவர்களிடம் கொண்டு வந்து இஸ்லாமிய நீரோட்டத்தினுள் இணைத்து விட்டார்கள். இவர்கள் இஸ்லாமாகிய செய்தியறிந்த அன்றைய பிரபலங்களுட் பலர் விரைவாக இஸ்லாத்தினுள் நுழைந்து கொண்டனர். அவ்வாறானவர்களுள் உஸ்மான், தல்ஹா, ஸுபைர், ஸ.்துப்னு அபீ வக்காஸ், அப்துர்றஹ்மானிப்னு அவ்ப் (றழியல்லாஹு அன்ஹும்) போன்றவர்கள் சிரேஷ்டமானவர்கள்.

இஸ்லாத்தை ஏற்றது முதல் நபியவர்களுனான தனது தொடர்புகளையும் சந்திப்புக்களையும் அதிகரித்துக் கொண்ட ஸித்தீக் (றழி) அவர்களுக்கிருந்த சமூக அந்தஸ்தும் மீறப்படுமளவு குறைஷியர்களால் இம்சிக்கப்பட்டார்கள். ஆயினும் அவர்களது இஸ்லாமியப் பற்றும் நபியுடனான உறவும் நாளுக்கு நாள் வலுவடைந்தே சென்றது. நபி (ஸல்) அவர்களுடன் அடிக்கடி தனிமையில் அமர்ந்து இந்த சத்தியத் தூதை எவ்வாறு மக்களுக்கு எடுத்தியம்புவது என்பது பற்றி ஆழமாக சிந்தித்தார்கள், நபியவர்கள் எங்கெல்லாம் செல்ல நினைத்தார்களோ அங்கெல்லாம் கூடவே சென்றார்கள்.

இஸ்லாத்தினதும் அதன் தூதரதும் பரம வைரியான அபூஜஹ்ல் சந்தர்ப்பம் கிடைத்தால் நபியைக் கொன்றுவிடக் கூடும் எனும் அச்சம் கொண்டிருந்த அபூபக்ர் (றழி) அவர்கள் எப்போதும் அபூஜஹ்லின் நடவடிக்கைகளில் அவதானமாகவே இருந்து வந்தார்கள் அதன் விளைவாக நினைவிளக்குமளவு அபூஜஹ்லாலும் அவனது தோழர்களாலும் நையப் புடைக்கப்பட்ட நிகழ்வுகளும் நடந்தேறின.

இஸ்லாமும் அதன் தூதரும் உயிர் வாழவேண்டுமாயின் குறைஷியரிடமிருந்து தப்பித்து மக்காவை விட்டும் வெளியேற வேண்டும் என்ற நிலை உருவெடுத்தது. அக்கணம்

எடுத்துவைக்கும் ஒவ்வொரு எட்டும் நபியவர்களதும் உடனிருப்போரதும் உயிர்களுக்கு ஆபத்து சூழ்ந்திருப்பதை உணர்த்திய வண்ணமிருந்தன. ஆனபோதிலும் தனது உயிரினும் மேலாக மதித்த நபியை பாதுகாப்பாக அழைத்துச் செல்ல வேண்டும் என்பதற்கான அனைத்து முன்னேற்பாடுகளையும் தனது செல்வத்திலிருந்து செய்து முடித்ததோடு அத்தனை இரகசியங்களையும் தன்னகத்தே மட்டும் காத்துவந்தார்கள்.

உயிர்காப்புப் பயணமாக அல்லாஹ்வால் அனுமதிக்கப்பட்ட ஹிஜ்றத்தின் போது நபி (ஸல்) அவர்களது முழுமையான நம்பிக்கையைப் பெற்றவராக உடன்சென்றார்கள். அங்கும் இஸ்லாத்தின் தூதருக்கு எவ்வித ஆபத்தும் தீண்டிவிடக் கூடாது என்பதற்காக ஆபத்தான சந்தர்ப்பங்கள் அனைத்திலும் தன்னையே முற்படுத்தினார்கள். அதன் வெளிப்பாடுகளில் ஒன்றே அன்னார் விஷநாகத்தின் தீண்டலுக்குட்பட்டமையாகும்.

சுமார் நாற்பதாயிரம் திர்ஹம்களுடன் இஸ்லாத்தை ஏற்ற அவர்கள் அன்று முதல் தனது கையிலுள்ள செல்வங்கள் அனைத்தையும் இஸ்லாத்திற்காகவும் அதன் தூதர் ஏனைய சகோதர முஸ்லிம்களுக்கும் செலவிடுவதில் சிறிதளவேனும் பின்நிற்கவில்லை. இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட ஒரே காரணத்திற்காக கொடுமைகளுக்காகிய பல அடிமை சகோதரர் களை தனது சொந்த நிதியிலிருந்து செலவு செய்து உரிமை பெற்றுக் கொடுத்தார்கள். அதனால் அதீக் எனும் சிறப்புப் பெயர் கூட அன்னவர்களுக்கு வழங்கப்பட்டது. ஹிஜ்றத்தின் போது பயணத்திற்கான செலவினங்கள் போக மீதமிருந்தவற்றையும் ஏனைய முஹாஜிர்களின் தேவையைக் கவனிப்பதற்காக எடுத்துச் சென்றார்கள்.

தபூக் போருக்கு நபியவர்கள் படை தயார் செய்தபோது பொருளாதார நிலை மிகவும் இறுக்கமாகக் காணப்பட்டதால் பலத்த சிரமங்களுக்கு மத்தியிலேயே தயார்படுத்தல் நடைபெற்றது அவ்வேளை தன்னிடமிருந்த செல்வம் அனைத்தையும் நபி (ஸல்) அவர்களுக்கு முன்னாற் கொண்டு வந்து வைத்தார்கள்.

ஒரு முறை நபி (ஸல்) அவர்கள்: அபூபக்ருடைய செல்வம் எனக்குப் பயனளித்தது போல் வேறு யாருடைய செல்வமும் பயனளிக்கவில்லை எனக்கூறினார்கள் (புகாரி), மற்று மோரிடத்தில் அவரது உயிரையும் பொருளையும் எனக்காக அர்ப்பணம் செய்தார் எனக் குறிப்பிட்டுள்ளார்கள்.

அவ்வாறே நபி (ஸல்) அவர்கள் காலத்துப் படை நடவடிக்கைகள் அனைத்திலும் அவர் முழுமையாகக் கலந்து கொண்டதோடு தம்மாலான அனைத்துப் பங்களிப்புக்களையும் வழங்கியுள்ளார்கள்.

இவைதவிர அன்னார் இஸ்லாத்திற்கு செய்த மகத்தான பணிகளுள் மிக முக்கியமானது அல்-குர்ஆனை நூலுருவிற்கு கொண்டு வந்து அதன் தூய்மையையும் நம்பகத் தன்மையையும் பாதுகாப்பையும் உறுதி செய்ததாகும். இவ்வாறு இஸ்லாத்தின் உதயம், எழுச்சி, பரம்பல் என எக்கோணத்தில் ஆராயப்பட்டாலும் அபூபக்ர் (றழி) அவர்களது பணி

ஏனைய அனைவரது பணிகளிலும் பார்க்க முன்னணியிலேயே திகழ்கின்றதென்பது வரலாற்று உண்மையாகும்.

**அபூபக்ர் (றழி) அவர்கள் கிலாபத்துக்கு ஆற்றிய பணிகள்:**

நபி (ஸல்) அவர்கள் தமக்குப் பின்னர் தமது கலீபா எனக் குறிப்பிட்டு யாரையும் நியமிக்காத போதிலும், முஸ்லிம்களின் தலைமைப் பொறுப்பை ஏற்று அவர்களை வழிநடாத்தும் பணிக்கு அபூபக்ர் (றழி) அவர்களே மிகத் தகுதிவாய்ந்தவர் என்பதைத் நடைமுறைச் சான்றுமூலம் உறுதி செய்து விட்டே இவ்வுலகைப் பிரிந்தார்கள் என்பதனைப் பின்வரும் நிகழ்வுகள் ஆணித்தரமாக இயம்பிக்கொண்டிருக்கின்றன.

1. பொருமானார் (ஸல்) அவர்கள் வபாத்தாவற்கு ஐந்துநாட்களுக்கு முன்னர் ஸஹாபாக்களை அழைத்து ஓர்உபதேசம் செய்தார்கள், அப்போது மஸ்ஜிதுந் நபவீயை சுட்டிக்காட்டி இதிலுள்ள அனைத்து வாயில்களையும் அடைத்து விடுங்கள் அபூபக்ர்(ரழி) அவர்களின் வீட்டிலிருந்து வருவதைத்தவிர ஏனெனில் அவரைவிட மிகச்சிறந்த ஒரு தோழரை நான் கண்டதில்லை எனக்கூறினார்கள். (பைஹகீ)

2. அப்துல்லாஹிப்னு ஸம்து என்ற ஸஹாபி அறிவிக்கிறார்கள்: நபி (ஸல்) அவர்களின் இறுதிக் காலத்தில் நோய் அதிகமாகி எழுந்து நிற்பதற்கேனும் அவர்களால் முடியாமலிருந்தது. அவ்வேளை நான் சில ஸஹாபாக்களுடன் அங்கிருந்தேன், அப்போது தொழுகைக்காக அதான் சொல்லப்பட்டதும் ஒருவரை தொழுகையை நடாத்தும்படி கூறுமாறு நபியவர்கள் என்னைப் பணித்தார்கள், நான் வெளிச்சென்று பார்த்த போது அபூபக்ர் (றழி) அவர்கள் அங்கு சமுகமளித்திருக்கவில்லை, உமரைக் கண்டதும் அவரைத் தொழு விக்குமாறு கூறினேன், அதனையேற்ற உமர் (றழி) அவர்கள் தொழுகைக்குத் தயாராகி தக்பீர் சொன்னதைச் செவியுற்ற நபியவர்கள் எங்கே அபூபக்ர்? அவரைத்தவிர வேறெவரையும் அல்லாஹ்வோ, முஸ்லிம்களோ அங்கீகரிக்கமாட்டார்கள் என இரு தடவைகள் கூறினார்கள். பின்னர் மீண்டும் அபூபக்ர்(றழி) அவர்கள் அத்தொழுகையை தொழுவித்தார்கள். விடயத்தைப் புரிந்துகொண்ட உமர் (றழி) அவர்கள் அப்துல்லாஹ்வே உனக்கென்ன நடந்துவிட்டது, ஏன் இவ்வாறு செய்தீர்? நபியவர்கள்தான் சொல்லியிருக்கிறார்கள் என்றெண்ணியல்லவா நான் தொழுவித்தேன், இல்லையென்றால் நான் செய்திருக்க மாட்டேனே எனக் கூறினார்கள். அதற்கு நான், உண்மையில் நபியவர்கள் குறிப்பிட்டுச் சொல்லவில்லைதான் இருப்பினும் அபூபக்ர்(றழி) அங்கு இல்லாமையால் குழுமியிருந்தவர்களில் மிகத் தகுதியானவராக உங்களைக் கண்டேன் அதனாற்தான் கூறினேன் எனக்கூறியதாகக் குறிப்பிடுகின்றார்கள். (அஹ்மத்)

3. மற்றுமோர் அறிவிப்பில் நபியவர்கள் தனது இறுதி நாளில் அப்பாஸ், அலீ (றழி) ஆகிய இருவரது தோள்களிலும் தாங்கியவாறு தொழுகைக்கு வந்தார்கள், அப்போது தொழுகை நடாத்திக் கொண்டிருந்த அபூபக்ர் (றழி) அவர்கள் நபியவர்களுக்கு விட்டுக் கொடுத்து ஸப்பில் சேர முற்பட்டார்கள், நபியவர்கள்

அதனைத் தடுத்து அவர்களும் உட்கார்ந்து பின்தொடர்ந்து தொழுதார்கள். (புகாரி, முஸ்லிம், அஹ்மத்)

4. ஒரு முறை நபி(ஸல்) அவர்கள், எனக்குப் பின்னால் அடுத்தடுத்துவரும் அபூபக்ர், உமர் ஆகிய இருவரையும் உங்களுக்கு வழிக்காட்டிகளாக எடுத்துக் கொள்ளுங்கள் எனக் கூறியதாக ஹுதைபதுப்னுல் யமான் (றழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

5. ஒருதடவை ஒரு பெண்மணி நபியவர்களிடம் (தமது பிரச்சினைகளை முறையிட) வந்தார், நபியவர்கள் அவரை வேறொரு சந்தர்ப்பத்தில் வருமாறு கூறினார்கள் அதற்கு அப்பெண்மணி நான் வரும்போது நீங்கள் இல்லாது (மரணித்து)விட்டால் என்ன செய்வது என வினவியபோது, நான் இல்லாவிட்டர்ல் அபூபக்ர் அவர்களை வந்து சந்திக்கலாம் எனக் கூறினார்கள். (புகாரி, முஸ்லிம்)

எடுத்துக்காட்டாக மேற்கூறப்பட்ட சில ஆதாரங்கள் மூலம் அபூபக்ர் (றழி) அவர்களே றஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களது அங்கீகாரத்திற்குரிய கலீபா என்பது புலனாகின்றது. அவ்வாறு தெரிவுசெய்யப்பட்ட முதற்கலீபா தனது குறுகியகால கிலாபத் பணியின்போது மறைந்து விட்ட தனது தலைவருக்குரிய உண்மை விசுவாசத்தை வெளிப்படுத்தினார்கள். அதாவது நபி (ஸல்) எந்த இடத்தில் விட்டுச் சென்றார்களே அதிலிருந்து தொடர்வதையே தனது பணியாகக் கொண்டார்களே தவிர தனது விருப்புக்கேற்ப அதிகாரத்தை பயன்படுத்த வில்லை.

நபியவர்களின் மறைவால் நிலைகொள்ளத் தடுமாறிய அந்த சமூகத்தின் தலைமைப் பொறுப்பை மறுத்துரைக்காது தன்மீது சுமத்தப்பட்டுள்ள தவிர்க்க முடியாத அமானிதமாக அதனை ஏற்றமை அன்னார் கிலாபத்துக்குச் செய்த முதற்பெரும் பணியாகக் கருத முடியும்.

தனது சேவையின் முதற் கட்டமாக நபி (ஸல்) அவாகளை அடக்கம் செய்யும் பணியினை வழி நடாத்திய கலீபா அவர்கள் இஸ்லாமிய அரசின் இஸ்திரத்தன்மையை காக்கும் சிந்தனையில் ஈடுபட்டார்கள். முதலில் அன்றிருந்த அனைத்து ஸஹாபாக்களையும் அழைத்து, அவர்களது சிந்தனைகளிற் தெளிவேற்படுத்திய பின்னர், நபியவர்களின் வபாத்தோடு இஸ்லாமும் அதன் சக்திகளும் முடங்கி விட்டதாக எண்ணிக் கொண்ட உள்நாட்டு வெளிநாட்டு சக்திகளுக்கு இஸ்லாமிய அரசு பலமிழக்கவில்லை என்பதை நிரூபிக்கத் திட்டமிட்டார்கள்.

முதற்கட்டமாக உரோமர்களுக்கெதிராக தயார்படுத்தப்பட்ட உஸாமா (றழி) அவர்கள் தலைமையிலான படையினை பல்வேறு மாறுபட்ட அபிப்பிராயங்கள் தெரிவிக்கப்பட்ட போதிலும் நபியவர்களின் வஸிய்யத் போன்று அதனைக் கருதி அனுப்பி வைத்தார்கள். இந்நிகழ்வு இஸ்லாமிய சாம்ராஜ்யத்தை அற்பமாகக் கருதி இலகுவில் அழித்தொழித்து விடலாமென கனவுகண்ட எதிர்சக்திகளுக்கு பேரடியாக அமைந்தது.

மறுபுறம் ஸகாத்தை மறுத்தும் இஸ்லாமியக் கட்டுக்கோப்பை மீறியும் குளப்பம் விளைவித்த நாட்டுப்புறத்தவர்கள் பொய்நபிமார்கள் எனப் பலசவால்கள் உள்நாட்டில் உருவெடுத்த போது கிஞ்சிற்றும் தளம்பாது அனுபவமிக்க பல தளபதிகள் தலைமையில் பல படைப் பிரிவுகளை அனுப்பி அவர்களது சவால்களை முறியடித்து இஸ்லாமிய கிலாபத்தின் பலத்தை நிரூபித்துக் காட்டினார்கள்.

அரசியல் அனுபவமிக்க பல கவர்னர்களை நியமித்து ஆட்சியை உறுதிப்படுத்தினார்கள். அத்துடன் இஸ்லாத்தின் தூதை பரவச்செய்யவும், இறைநிராகரிப்பாளர்களான ஆட்சியாளர் களால் அவர்களது சொந்த மக்களுக்கே இழைக்கப்பட்டுக் கொண்டிருந்த அநியாயங்கள், அவர்களால் இஸ்லாமிய உலகின் எல்லைப் புறங்களுக்கிருந்த அச்சுறுத்தல்களிலிருந்து பாதுகாத்தல் போன்றபல காரணங்களுக்காகப் படை நகர்வுளை மேற்கொண்டார்கள்.

இவ்வாறு இஸ்லாமிய கிலாபத்தைக் கட்டிக்காக்கப் பல முன்னெடுப்புக்களை துணிகரமாகவும் இறையருளால் வெற்றிகரமாகவும் மேற்கொண்ட முதற்கலீபா சுமார் இரண்டரை வருடங்களுக்குட்பட்ட குறுகிய கால பணியின் இறுதிக் கட்டம் நெருங்கி விட்டதை உணர்ந்ததும் இஸ்லாமிய கிலாபத்தைப் பாதுகாக்க மேலுமொரு மகத்தான பணியினை மேற்கொண்டார்கள். அதுவே நபி (ஸல்) அவர்களின் முன்னறிவிப்புக்கள் மற்றும் அன்றைய சமூகத்தின் உயர்மட்ட புத்திஜீவிகளுடனான தனித்தனியாகவும் குழுக்களாகவும் மேற்கொள்ளப்பட்ட கருத்துக் கணிப்புக்களினூடாக உமறிப்னுல் கத்தாப் (றழி) அவர்களைத் தான் மரணிக்கு முன்பதாகவே நியமித்து இஸ்லாமிய கிலாபத்தின் ஸ்திரத்தன்மையைப் பாதுகாத்தார்கள்.

இவ்வாறான அரியதும் சிறப்புமிக்கதுமான பணிகளையும் பக்குவங்களையும் கொண்டிருந்த மையே அன்று அவர்களது சூழலில் கலந்திருந்த ஏனைய ஸஹாபாப் பெருமக்கள் அன்னாரைப் பின்வருமாறு மதப்பீடு செய்யக் காரணமாயிருந்தது:

இப்னு உமர் (றழி) அவர்கள் குறிப்பிடுகின்றார்கள்: நாங்கள் நபி (ஸல்) அவர்கள் காலத்தில் மனிதர்களில் சிறந்தவர்களை மதிப்பீடு செய்வோம் அப்போது அபூபக்ரே மிக சிறந்தவராகத் தெரிவு செய்யப்படுவார் பின்பு உமர் அதன் பின் உஸ்மான் (றழி) எனக் கூறினார்கள்.

அவ்வாறே அலீ (றழி) அவர்களின் மகனாகிய முஹம்மதிப்னுல் ஹனபிய்யா கூறுகின்றார்: நான் எனது தந்தை(அலீ)யிடம் அல்லாஹ்வின் தூதருக்கடுத்து யார் சிறந்த மனிதர் எனக் கேட்டேன் அதற்கவர் அபூபக்ர் எனக்கூறினார். இவைபோன்று இன்னும் பல சிறப்பம்சங்கள் அன்னாருக்கின்ற போதிலும் அனைத்தையும் இங்கு குறிப்பிட முடியாமையால் சுருக்கிக் கொள்ளப்படுகிறது.

## 2. கலீபா உமர் இப்னுல் கத்தாப் (றழி) அவர்களது சமய, சமூக, அரசியற் பங்களிப்புக்கள்:

இஸ்லாமிய சாம்ராஜ்யத்தின் நேர்வழி பெற்றகலீபாக்களின் இரண்டாமவரான உமர் (றழி) அவர்கள் இஸ்லாத்திற் பிரவேசித்த காலம் தொட்டுத் தனது இறுதி மூச்சு வரை கலிமாவின் கொடி மேலோங்க வேண்டுமென்பதில் முழுமூச்சாக ஈடுபட்டுள்ளார்கள்.

''அதீ'' குலத்தைச் சேர்ந்த உமர் (றழி) அவர்கள் ஜாஹிலியக் காலத்தில் குறைஷிக் கோத்திரத்தின் கௌரவ அடையாளமாகவும் இராஜதந்திரியாகவும் கணிக்கப்பட்டார்கள். அவர்களது ஆலோசனை முன்மொழிவுகளுக்கு எப்போதும் முன்னுரிமை வழங்கப்பட்டது. மல்யுத்த வீரராகவும் எழுத வாசிக்கத் தெரிந்தவராகவுமிருந்த உமர் அவர்கள் நபி (ஸல்) அவர்கள் இஸ்லாத்தின் தூதை பெற்றுக் கொண்ட காலம் முதல் அதன் முன்னணி விரோதிகளில் ஒருவராகக் காணப்பட்டார். இறுதியில் நபியவர்களைக் கொல்வதுதான் பொருத்தமான ஒரேயொரு தீர்வு என ஜாஹிலியர்கள் முடிவு செய்த போது, ஆபத்து நிறைந்த அப்பணியை தயக்கமின்றி ஏற்றுச்சென்றவர் இந்த உமரே ஆகும். ஆயினும், அல்லாஹ் நபியவர்களின் பிரார்த்தனையை ஏற்று உமரை இஸ்லாத்தினுள் நுழைவித்தான். அதுவே மக்காவில் இஸ்லாம் தலைநிமிர்த்த அடித்தளமாய் அமைந்தது.

நபி(ஸல்) அவர்களின் கரம் பற்றி இஸ்லாத்துட் பிடவேசித்த உமர்(றழி) அடுத்த கணமே வெளிப்பட்டுச் சென்று ஒவ்வொரு குறைஷித் தலைவரது வீட்டுக்கதவினையும் தட்டித்திறந்து தான் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட செய்தியைச் சொல்லிவிட்டு க.்.பாவில் வந்து பகிரங்கமாகத் தனது இஸ்லாத்தை வெளிப்படுத்தினார்கள். மக்கத்து முஷ்ரிக்குகளுக்கு எவ்வளவுதான் ஆக்ரோஷம் வந்த போதிலும் உமரை எதிர்ப்பதற்கோ ஏனைய முஸ்லிம்களோடு நடப்பது போன்று நடந்து கொள்வதற்கோ தைரியம் ஏற்படவில்லை, இதுவே உமர் (றழி) அவர்களின் முக்கியத்துவத்தை உணர்த்த போதிய சான்றாகும்.

மீண்டும் நபி (ஸல்) அவர்களிடம் வந்த உமர் (றழி) யாறஸூலல்லாஹ் நாம் இருப்பது நேர்வழியில் தானே! ஆவ்வாறாயின் ஏன் நாம் பயந்து ஒழிந்து அடைபட்டுக் கொண்டிருக்க வேண்டும்! என்றவாறு நபி (ஸல்) அவர்களுடன் சுமார் நாற்பதுக்குட்பட்ட சிறுதொகை முஸ்லிம்களையும் அணியாகக் கொண்டு வந்து க.்.பாவில் தொழவைத்தார்கள். ஆத்திரம் தாங்க முடியாது கொதித்தாலும் கூட உமர் இருக்கும் போது எதுவும் செய்து விட முடியாது என்ற அச்ச உணர்வால் தள்ளி நின்றனர் முஷ்ரிகுகள். இந்நிகழ்விலிருந்தே உண்மையையும் பொய்யையும் பிரித்து வெளிப்படுத்தியவர் எனும் பொருள்பட ''பாறூக்'' என்ற சிறப்புப் பட்டத்தை நபியவர்கள் அன்னாருக்கு வழங்கினார்கள்.

இவ்வாறு புரட்சிகரமான ஆரம்பத்தைக் கொண்ட உமர் (றழி) அவர்களின் வாழ்வு இஸ்லாத்தின் சேவைக்காகவே அர்ப்பணம் செய்யப்பட்டது. இப்னு அப்பாஸ் (றழி)

அவர்களூடான ஓர் அறிவிப்பில்: உமர்(றழி) அவர்களை அடக்கம் செய்த தினத்தில் அலீ(றழி) அவர்கள் நின்றவண்ணம் உமா ˙(றழி) அவர்களுக்கு றஹ்மத் வேண்டிப் பிரார்த்தித்தார்கள், அதன்போது: நான் பின்பற்றியொழுகக்கூடிய, உங்களைவிட சிறந்த ஒருவரை உங்களுக்குப் பின்னால் என்னால் காணமுடியவில்லை, நிச்சயமாக அல்லாஹ் உம்மை உமது இரு தோழர்களுடனும் சேர்த்து வைப்பான் என்பதை நான் உறுதியாக நம்புகின்றேன், ஏனெனில் நபி (ஸல்) அவர்கள் அடிக்கடி நானும் அபூபக்ரும் உமறும் போனோம், நானும் அபூபக்ரும் உமறும் நுழைந்தோம், நானும் அபூபக்ரும் உமறும் புறப்பட்டோம் என பெரும்பாலான சந்தர்ப்பங்களி லெல்லாம் நீங்கள் மூவரும் இணை பிரியாதிருந்ததைக் குறிப்பிடக் கேட்டிருக்கிறேன் என்று கூறிக் கொண்டிருந்தார்கள். எனக் குறிப்பிடுகின்றார்கள்.

மதீனா ஹிஜ்றத்தின் போது பகிரங்கமாக வாளை ஏந்திக கொண்டு அனைவருக்கும் முன்னாலேயே தனது பயணத்தை ஆரம்பித்து மதீனா சென்றதிலிருந்து இஸ்லாத்திற்காக மேற்கொள்ளப்பட்ட அனைத்து யுத்தங்கள் படையெடுப்புக்களிலும் பங்கு கொண்ட மகத்தான தொண்டு புரிந்தார்கள், நபி (ஸல்) அவர்களது கண்ணையும் காதையும் போன்று அன்னவர்களுக்கருகிருந்து ஒத்தாசை புரிந்தார்கள். ஆல்குர்ஆனையும் நபி மொழிகளையும் கற்றல் மனனமிடலில் கூடுதல் கவனம் செலுத்திய அவர்கள் அவற்றைப் பாதுகாத்து பின்வருவோருக்கு ஒப்படைப்பதிலும் சிறந்து விளங்கினார்கள். தூர நோக்கும் நிர்வாகத் திறனும் ஒருங்கே அமையப் பெற்றிருந்ததால் அவர்களது ஆலோசனைகள் இஸ்லாமிய சமூகத்திற்கு மிகப் பொருத்தமானவையாகக் காணப்பட்டன. பல்வேறு சந்தர்ப்பங்களில் அவர்களது ஆலோசனையை ஆமோதித்து இறை வசனங்களே அருளப்பெற்றுள்ளன. சில அறிவிப்புக்களில் நான்கு எனவும் இன்னும் சிலவற்றில் ஏழு எனவும் மேலும் சில இருபதுக்குமேற்பட்ட சந்தர்ப்பங்களில் உமர் (றழி) அவர்களின் ஆலோசனையை வஹீ உறுதி செய்துள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது.

முர்தத்களுடன் நடைபெற்ற போர்களில் பெருமளவில் அல்குர்ஆனை மனனமிட்ட ஹாபிழ்கள் ஷஹீதான போது உமர் (றழி) அவர்கள் கலீபா அபூபக்ர் (றழி) அவர்களுக்கு அழுத்தம் கொடுத்து அல்குர்ஆனை ஒன்று திரட்டி நூல் வடிவம் கொடுக்க பெரும் பங்காற்றினார்கள்.

முஸ்லிம்களின் கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டுவரப்படும் அனைத்துப் பிரதேசங்களிலும் பள்ளிவாயல்களை நிர்மாணிப்பதில் உமர் (றழி) அவர்கள் பெரும் அக்கறை காட்டினார்கள். சில வரலாற்றுக் குறிப்புக்களின் பிரகாரம் உமர் (றழி) அவர்கள் காலத்தில் சுமார் 4000 பள்ளிவாயல்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாது புனித க.ஃபாவை விஸ்தரிப்பு செய்வதற்காக அதனை அண்மயிருந்த சில வீடுகளையும் நிலங்களையும் விலைகொடுத்து வாங்கி க.ஃபாவை விஸ்தீரணப்படுத்தினார்கள். அதேபோல் மதீனாவிலுள்ள மஸ்ஜிதுன் நபவீயையும் விஸ்தரிப்புச் செய்தார்கள்.

கடிதப் போக்குவரத்துக்களின் போது அவற்றின் திகதிகள் இல்லாதிருந்தமை பல்வேறு சிக்கல்களை தோற்றுவித்தமையால் அதனை போக்குவதற்காக இஸ்லாமிய ஹிஜ்ரி

நாளேட்டினை அறிமுகம் செய்தார்கள். அடிமைகள் விவகாரத்திலும் கூடிய கவனம் செலுத்திய உமர் (றழி) அவர்கள் அடிமைத்தளையை பெருமளவில் ஒழித்தார்கள். மேலும் சமூக ஒழுக்க விவகாரங்களில் கூடுதல் செல்வாக்குச் செலுத்தும் குடும்ப உறவு, விவாகம், விவாகரத்து, திருமண விடயங்கள் போன்றவற்றுக்கு பல புதிய நடைமுறைகளை அறிமுகம் செய்ததோடு, சில ஒழுக்காற்று நடவடிக்கைகளையும் மேற்கொண்டார்கள்.

திம்மிகளின் சுதந்திரம் பாதுகாப்பு விவகாரங்களில் கூடுதல் கவனம் செலுத்திய கலீபா உமர் (றழி), அவர்களது விடயத்தில் நீதமாகவும் கருணையோடும் நடந்து கொண்டார்கள். அத்துடன் பைத்துல்மால் நிதியிலிருந்து முஸ்லிம்கள் எல்லோருக்கும் அவரவர் குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கைக்கேற்ப உதவித் தொகைகளை நிர்ணயித்து ஒழுங்காக விநியோகிக்கப்பட ஏற்பாடு செய்தார்கள்.

வரட்சியும் உணவுப் பற்றாக்குறையும் ஏற்பட்ட போது கலீபா உமர் (றழி) அவர்கள் வெளி மாகாணங்களிலிருந்து உணவுப்பொருட்களை வரவளைத்து மக்கள் வறுமையைப் போக்கியதோடு சோதனைகளிலிருந்து விடுபடுவதற்காக மக்களை மார்க்கத்தின் வழியொழுகப் பயிற்சியளித்தார்கள்.

இவ்வாறு, கிலாபத் பொறுப்பினை சுமக்கு முன்னரும் சுமத்தப்பட்ட பின்னரும் சமய சமூகப் பணிகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்ட அவர்கள் இஸ்லாமிய சமூகத்தின் மத்தியில் அபூபக்ர் (றழி) அவர்களுக்கு அடுத்த அந்தஸ்தில் நோக்கப்பட்டார்கள் என்பதற்கு பல எண்ணிக்கையிலான சான்றுகளை முன்வைக்கலாம். இதனாலேயே முதற் கலீபா அபூபக்ர் (றழி) அவர்கள் தனது மரணத்தின் முன்னதாகவே அவரை கலீபாவாகப் பிரகடனப்படுத்திவிட்டுச் சென்றார்கள் மக்களும் ஏகோபித்து அதனை அங்கீகரித்தார்கள்

ஹிஜ்ரி 13ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இஸ்லாமிய கிலாபத்தைப் பொறுப்பேற்ற கலீபா உமர் (றழி) அவர்கள் அதனை ஸ்திரப்படுத்தி அதன் புனிதத்துவத்தைப் பாதுகாப்பதற்காக அல்லும் பகலும் அயராது உழைத்தார்கள். மாகாணங்களுக்கான கவர்னர்களை நியமிப்பதில் கடினமான போக்கைக் கையாண்டார்கள். சிறிதோ பெரிதோ எவ்வாறான முடிவுகளாயினும் கலீபாவின் ஒப்புதலின்றி அமுல்படுத்தக்கூடாது என்பதில் மிக உறுதியாகக் காணப்பட்ட தோடு பொதுமக்கள் விடயத்தில் அதீத அக்கறை காட்டடினார்கள் அவர்கள் விவகாரங் களில் கவர்னர்களை மாற்றுதல் தண்டித்தல் போன்றவற்றில் எவ்வித தயக்கமும் காட்ட வில்லை. மாறுவேடங்களில் தாமாகவே சென்று மக்கள் குறைகளை அறிந்து உடனுக்குடன் தீர்த்து வைத்தார்கள். இவ்வாறு கிலாபத்திற்கு மெருகூட்டிய கலீபா அவர்கள் அதனை விஸ்தரிக்க அளப்பரிய பங்களிப்புச் செய்தார்கள்.

1. இஸ்லாமிய இராச்சியத்தின் எல்லைகளை விரிவுபடுத்தி எதிரிகளின் அச்சுறுத்தல்களிலிருந்து முஸ்லிம் தேசத்தைப் பாதுகாப்பதோடு இஸ்லாத்தின் சுபீட்சத்தை ஏனைய மக்களும் அனுபவிக்க வேண்டும் எனும் நோக்கில் நபி (ஸல்) அவர்களால் துவக்கி வைக்கப்பட்டு, கலீபா அபூபக்ர் (றழி) அவர்களால் தொடரப்பட்ட விரிவாக்கல் நடவடிக்கையை மிகச் சிறப்பாக மேற்கொண்டார்கள். அதற்காக இஸ்லாமியப் படையை

மூன்று அணிகளாகப் பிரித்து தெளிவான அறிவுறுத்தல்களோடு அனுப்பிவைத்தார்கள், அவற்றில்:-

1. பாரசீக வல்லரசின் கீழிருந்த பகுதிகளை சீர் செய்யும் நோக்கில் அபூ மூஸா அல் அஷ்அரீ (றழி) என்ற ஸஹாபியின் தலைமையின் கீழ் ஒரு படைப்பிரிவு சென்றது, அவர்களுக்கு தளமாக கூபா, பஸாறா ஆகிய இருநகரங்கள் நிர்மாணிக்கப்பட்டன. இங்கிருந்து நகர்ந்த படையணிகள் ஒன்றன் பின் ஒன்றாக பாரஸீக வல்லரசின் நிலபுலன்களை இஸ்லாமிய கிலாபத்தின் கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டு வந்தன.

2. மறுமுனையில் அபூ உபைதா, காலித் இப்னுல் வலீத் (றழி) ஆகியவர்களின் தலைமையிற் சென்ற படையணிகள் உரோம வல்லரசின் ஆள்புலங்களை தமது கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டு வந்து அங்கு நிலவிவந்த அடக்குமுறைகளிலிருந்து அம்மக்களை மீடடெடுத்தன. இதன் மூலம் விடுதலையும் விமேசனமும் பெற்ற அவர்கள் தாமாகவே சாரை சாரையாக இஸ்லாத்தினுட் பிரவேசித்தனர். ஷாம் தேசத்தை தமது கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டு வந்த முஸ்லிம்கள் அங்கு நகரங்களை ஒழுங்கு படுத்தி இஸ்லாமிய ஆட்சியை நிறுவி மக்களுக்கு நீதி செலுத்தினார்கள்.

3. மூன்றாம் முனையாக அம்றுப்னுல் ஆஸ் (றழி) அவர்கள் தலைமையிலான அணி எகிப்தும் அதனை அண்டியதுமான ஆபிரிக்கப் பிரதேசங்களிலும் இஸ்லாமிய கிலாபத்தின் சுபீட்சங்களை எட்டச் செய்தார்கள். அங்கு தமது நிலையினை உறுதி செய்த முஸ்லிம்கள் தளபதி அம்றிப்னுல் ஆஸ் (றழி) அவர்களின் வழிகாட்டலோடு ‘‘புஸ்தாத்’’ நகரை நிறுவி பள்ளிவாசலையும் நிர்மாணித்தார்கள்.

இவ்வாறு மிக வேகமாக வியாபித்துச் சென்ற இஸ்லாமிய கிலாபத், கலீபா அவர்களின் மிகத் துல்லியமானதும் இறுக்கமானதுமான நிர்வாக முறைமையால் நீதிதவறாது வலிமை பெற்றுக் காணப்பட்டது. அந்நிய பிரதேசத்து மக்களும் இஸ்லாமிய கிலாபத்தின் கட்டுப்பாட்டுப் பகுதியில் வசிப்பதற்கு முனைப்புக் காட்டுமளவு சௌஜன்யம் நிரம்பப் பெற்றிருந்தது.

2. நபி (ஸல்), அபூபக்ர் ஸித்தீக் (றழி) அவர்களதும் காலப்பகுதிகளிலான இஸ்லாமிய நிர்வாகத்தின் எல்லைகளைப் பார்க்கிலும் இரண்டாம் கலீபாவின் காலத்தில் அதன் எல்லைகள் பன்மடங்கு விஸ்தீரணமடைந்ததால், நிர்வாகத்தை சிறப்புற மேற்கொள்வதற்கு பல முன்னேற்றகரமான அடிப்படைகளை இஸ்லாமிய கிலாபத்திற்கு அறிமுகம் செய்ய வேண்டிய அவசியம் கலீபா உமர் (றழி) அவர்களுக்கு ஏற்பட்டது. அதனை நிவர்த்திக்கு முகமாக நிர்வாக ரீதியாகப் பல்வேறு ஒழுங்குகளை அறிமுகம் செய்தார்கள்.

அ. நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டல்களை அடிப்படையாகக் கொண்டு கலீபாவிற்கான உரிமைகள், கடமைகள், மக்களோடு அவருக்கிருக்க வேண்டிய உறவுமுறை போன்ற வற்றிற்கு ஒழுங்குகளையும் வரையறைகளையும் ஏற்படுத்தினார். அதனடிப்படையில்:

- கலீபா: ‘‘இமாமத்’’, ‘‘இமாறத்’’ ஆகிய, சமய உலக விவகாரங்களுக்கான அதிகாரம் பெற்ற தலைவராகக் காணப்படுவார்.

- கலீபாவின் அதிகாரங்கள் மக்கள் மூலமாகவே கிடைக்கப்பெறுவதால் மக்களது அங்கீகாரம் விசுவாசப் பிரமாணம் ஊடாகப் பெறப்படல் வேண்டும். அதேநேரம் கலீபாவின் தவறுகளை சுட்டிக்காட்டவும் தெளிவுபடுத்தவும் மக்களுக்கு உரிமையுண்டு. மறுபுறம் மக்களின் ஆலோசனைகளை ஷுறாவின் வாயிலாகப் பெற்றுக் கொள்வதும் கலீபாவின் கடமையாகும்.

- கலீபாப் பதவி வாரிசுரிமையல்ல, எனவே மக்களுக்கும் மார்க்கத்திற்கும் மிகப் பொருத்தமானோரும் தகுதி வாய்ந்தோருமே தெரிவு செய்யப்படல் வேண்டும்.

ஆ. ஆளுநர் நியமனம்:

- கலீபா உமர் (றழி) அவர்கள் மாகாண ஆளுநர் நியமனத்திற்கான திட்டவட்டமான ஒழுங்குகளையும் விதிமுறைகளையும் அறிமுகம் செய்தார்கள். அதனடிப்படையில் மாகாண ஆளுநர்களின் அதிகாரங்களை வரையறை செய்து, ஷரீஆ அடிப்படை யிலான குறிப்பாக தொழுகை நடாத்துதல் அரச சட்டங்களை அமுல் செய்தல் ஆகிய அதிகாரங்களை வழங்கியதோடு, நீதித்துறைக்கு தனித்தனியான நீதிபதி களை நியமனம் செய்தார்கள், அதேபோல் ஸகாத் ஏனைய இறைவரிகளை வசூலித்தல் என்பவற்றிற்கு பிரத்தியேக அதிகாரிகளை நியமித்ததோடு, இவ்வனைத் துப் பதவிகளுக்குமான நியமனங்கள், பதவி நீக்கல் போன்ற விடயங்கள், மற்றும் அனைத்து முக்கிய தீர்மானங்களும் சூறாவின் அடிப்படையில் நேரடியாக கலீபாவினாலேயே மேற்கொள்ளப்பட வேண்டுமென வரையறுத்தார்கள்.

- ஆளுநர் நியமனங்களின் போது அவர்களது சொத்து விவகாரங்களைத் தெளிவாக அடையாளங் கண்டு பொது மக்களுடனான அவர்களது உறவுகள், தனிப்பட்ட நடவடிக்கைகளில் அவர்களது அணுகுமுறைகள் போன்றவற்றை மிக நுணுகி ஆராய்ந்ததன் பின்னரே நியமனங்களை வழங்கினார்கள். அத்தோடு பதவி கேட்பவர்கள், தனது அல்லது நபி (ஸல்) அவர்களது நெருங்கிய உறவினர்கள் போன்றவர்களை நியமிப்பதைத் தவிர்ந்து கொண்டார்கள், காரணம் கேட்டபோது அத்தகையவர்கள் தனிப்பட்ட வகையில் கூடுதல் சொகுசு அல்லது சலுகைகளை அனுபவிக்கக் கூடும் எனப் பதிலளித்துள்ளார்கள்.

- நிர்வாக வேலைகளை இலகுபடுத்துவதற்காக மாகாணங்கள் மாவட்டங்கள் என பல அலகுகளாகப் பிராந்தியங்களைப் பிரித்துப் பொறுப்பு வாய்ந்தவர்களை நியமனம் செய்தார்கள். ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஆளுநர் நியமிக்கப்படுவதோடு துறைசார் அதிகாரிகளும் பிரத்தியேகமாக நியமனம் செய்யப்பட்டனர். கலீபா உமர் (றழி)

அவர்கள் காலத்து தலைமை அதிகாரிகளையும் பதவிகளையும் நோக்குமிடத்து பின்வருமாறு நிரற்படுத்தலாம்:

1. (காதிப்) தலைமைக் காரியதரிசி
2. (காதிபுத் தீவான்) இராணுவ காரியதரிசி
3. (ஸாஹிபுல் கறாஜ்) இறைவரி வசூலுக்கான அதிகாரி
4. (ஸாஹிபுல் அஹ்தாத்) பொலிஸ் அதிகாரி
5. (ஸாஹிபு பைதில் மால்) திறைசேரி செயலாளர்
6. (காழீ) தலைமை நீதிபதி

மேற்கூறப்பட்டுள்ள அதிகாரிகளை கண்காணித்தல் மேற்பார்வை செய்தல் வழிநடாத்தல் போன்ற பணிகள் ஆளுநரைச் சார்ந்ததாகும்.

இ. திறைசேரி:

- முஸ்லிம்கள் வரலாற்றில் முதன்முதலாக திறைசேரியை நிறுவிய பெருமை கலீபா உமர் (றழி) அவர்களையே சாரும். இதற்கு ஸகாத், ஜிஸ்யா, கனீமத், கறாஜ், வாரிஸுகளற்றவர்கள் விட்டுச் சென்ற சொத்துக்கள் போன்றவற்றினூடாகக் வருமானங்கள் கிடைக்கப்பெற்றன. இவ்வாறான வரவுகள் பொருத்தமானவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப் படுவதற்காகவும், நெறிப்படுத்துவதற்காகவும் மதிப்பீடு செய்தல், ஆவணப்படுத்தல் போன்ற விடயங்கள் அறிமுகம் செய்யப்பட்டன.

- காணி நிர்வாகம்:

  இஸ்லாமியப் படைகளால் தொடரப்பட்ட புனர்வாழ்வு நடவடிக்கைகளால் மிக நீண்ட நிலப்பரப்புக்கள் கிலாபத்தின் கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டுவரப்பட்டன. இத்தகைய நிலப்பரப்பில் விவசாயக் காணிகளும் பெருமளவிற் காணப்பட்டன. பொதுவாக படை நடவடிக்கைகளின் போது கையாளப்படும் வெற்றியாளர்கள் தமக்கிடையே பகிர்ந்து கொள்ளும் மரபினை கலீபா உமர் (றழி) அவர்கள் மாற்றியமைத்தார்கள். அதில் தனிநபர்களுக்கு சொந்தமில்லாதவற்றை அரச உடமையாக்கியும், தனியாருக்குச் சொந்தமானவற்றை அதன் உரித்தாளிகளே தொடர்ந்து பயன்படுத்துவதற்கும் அனுமதி வழங்கியதோடு அதன் வருமானத்திலிருந்து ஒரு சிறு தொகையை திறைசேரி நிதிக்கான ஒரு வரியாக செலுத்தவும் உத்தரவிட்டார்கள்.

- இராணுவம்:

  இஸ்லாமிய வரலாற்றில் முதன் முதல் ஒழுங்கமைக்கப்பட்ட இராணுவம் உருவாக்கப்பட்டது கலீபா உமர் (றழி) அவர்களது காலத்திலேயாகும். இஸ்லாமிய

நிர்வாகத்திலுள்ள அனைத்து முஸ்லிம்களுக்கும் இராணுவ சேவை கடமை என்பதைக் கொள்கையாகக் கொண்ட கலீபா இராணுவத்தை நிரந்தர இராணுவம், தொண்டர் (நிரந்தரமற்ற) படை என இரு பிரிவுகளாகப் பிரித்து முதற் பிரிவினரை சுமார் எட்டு வகையாக வகைப்படுத்தி அதற்கேற்ப சம்பளத் தொகைகளையும் நிர்ணயம் செய்தார்கள். இரண்டாம் பிரிவினர் அவசியம் ஏற்படும் போது மட்டும் சேவைக்கழைக்கப்பட்டனர்.

இராணுவத்தினரை நிர்வகிக்க ''தீவானுல் ஜுன்த்'' எனும் இலாகாவை உருவாக்கி அவற்றின் கிளைகளை அனைத்து முக்கிய நகர்களிலும் நிறுவினார்கள், அத்துடன் படையினருக்கான தங்குமிடங்களைக் கட்டுவித்ததோடு குடியிருப்புக்களையும் நிறுவினார்கள். இவை தவிர சுமார் நான்காயிரம் குதிரைகளுக்கான பராமரிப்பு நிலையங்கள் நிறுவப்பட்டு எந்நேரமும் யுத்த நடவடிக்கைகளுக்குப் பொருத்தமாகப் பராமரிக்கப்பட்டன.

- நீதி நிர்வாகம்:

வரலாற்றில் முதன் முதலாக நீதித்துறையை பொது நிர்வாகத்திலிருந்து வேறுபடுத்தி தனியாகவும் சுதந்திரமாகவும் இயங்கச் செய்த பெருமை கலீபா உமரவர்களையே சாரும். ஷரீஆ சட்டங்களில் தேர்ந்தவர்களை நீதிபதிகளாகத் தெரிவு செய்த கலீபா இஸ்லாமிய ஷரீஆவின் அடிப்படையிலேயே தீர்ப்புக்களை வழங்குமாறு பணித்ததோடு ஊழல் மோசடிகளைத் தவிர்ப்பதற்காக நீதிபதிகளுக்கு மிக உயர்ந்த சம்பளங்களை வழங்கினார்கள்.

- திறைசேரியும் நாணயமும்:

முன்னைய இரு தலைவர்களது காலப் பிரிவிலும் இல்லாதவாறு இஸ்லாமிய ஆட்சி விரிவடைந்து வரவு செலவுகளும் அதிகரித்தன. ஆயினும் செலவினங்களைப் பார்க்கிலும் வரவு அதிகரித்தமையால் மேலதிக செல்வத்தை எவ்வாறு கையாளலாம் என்பதை ஸஹாபாக்களின் ஆலோசனை சபையில் விவாதித்த கலீபா இறுதியில் திறைசேரி ஒன்றை நிறுவும் முடிவிற்கு வந்தார். ஆந்த வகையில் இஸ்லாமிய உலகில் முதற் திறைசேரி கலீபா அவர்களின் ஆட்சியிலேயே நிறுவப்பட்டு அதற்கான உத்தியோகத்தரும் உதவியாளர்களும் கணக்காளர்களும் நியமனம் செய்யப்பட்டனர். காலப்போக்கில் மேலும் விரிவடைந்த இந்நிறுவனம் மாகாணங்களுக்கும் கிளைகளை உருவாக்கி அங்கும் இதன் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. கிளைகளில் மேலதிகமாகத் திரளும் செல்வம் மத்திய நிறுவனத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டன. இதனால் இராணவம் நீதிபதிகள் மற்றும் ஏனைய அரச ஊழியர்களுக்கான ஊதியங்கள் வழங்குவது இலகுவானதுடன் பொது மக்களுக்கும் உதவுத் தொகை தொடராக வழங்கப்பட இலகுவாக வழிசமைத்தது.

அது மட்டுமல்லாது இஸ்லாமிய வரலாற்றில் முதன்முதலாக தனித்துவமான நாணயமொன்றினை அச்சிட்டு வெளியிட்ட பெருமையும் கலீபா உமர் (றழி) அவர்களையே சாரும்.

3. பொதுப் பணிகள்:

- கலீபா உமர் (றழி) அவர்கள் காலத்தில் மேலும் பல பொதுப் பணிகள் இடம் பெற்றன. அவற்றுள் பாதைகள் அமைத்தல் செப்பனிடல், பொது தங்குமிடங்கள், பொதுக் குளியலறைகள், மலசல கூடங்கள் பொதுக் கிணறுகள் போன்றன அமைக்கப்பட்டன. அத்துடன் குற்றம் சுமத்தப்பட்ட கைதிகளை நெறிப்படுத்து வதற்காக சிறைச்சாலைகளும் முதன் முதலில் கலீபா உமர் (றழி) அவர்கள் காலத்திலேயே உருவாக்கப்பட்டது, அங்கு கைதிகள் தடுத்துவைக்கப்பட்டு அவர்களை நல்வழிப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

- கலீபா அவர்களது காலத்தில் பல முக்கிய நகரங்கள் உருவாக்கப்பட்ட தோடு அவை நன்கு திட்டமிடப்பட்டும் வடிவமைக்கப்பட்டன. அத்துடன் முஸ்லிம்கள் வாழும் எல்லாப் பிரதேசங்களிலும் பள்ளிவாயல்கள் நிர்மாணி க்கப்பட்டன. மேலும் எல்லா நகர்களிலும் அரச சேவைகளுக்காகக் கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டதோடு அரச அதிகாரிகளுக்காக வதிவிடங் களும் ஒழுங்கு செய்யப்பட்டு வழங்கப்பட்டன.

- குடி நீருக்காகக் கிணறுகள் தோண்டப்பட்டதோடு நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்துவதற்காக ஓடைகள் கால்வாய்கள் அணைக்கட்டுக்கள், குளங்கள் போன்றனவும் அமைக்கப்பட்டன.

இவ்வாறு அக்காலத்தில் அரிய பல பணிகளையும் சேவைகளையும் ஆற்றிய கலீபா உமர் (றழி) அவர்களின் ஆட்சி இஸ்லாமியர் வரலாற்றில் சிறந்த முன்னுதாரணமாகும்.

### 3. கலீபா உஸ்மான் (றழி) அவர்களது சமூக சமய அரசியற் பங்களிப்புக்கள்:

குறைஷிக் குலத்தில் உமைய்யாப் பரம்பரையில் பிறந்த உஸ்மான் (றழி) அவர்கள் தனது முப்பத்து நான்காம் வயதில் அபூபக்ர் (றழி) அவர்களது தூண்டுதலால் இஸ்லாம் அறிமுகமான ஓரிரு நாட்களுக்குள்ளேயே அதிற் பிரவேசித்து விட்டார்கள் இதன் மூலம் இஸ்லாத்திற் பிரவேசித்த முதல் பத்துப்பேரில் ஒருவராக மாறினார்கள். அன்று தொடக்கம் அதனைப் பாதுகாத்தல் பரவச் செய்தல் போன்றவற்றில் முழுமையாகத் தன்னை ஈடுபடுத்திய அவர்கள் வர்த்தகராகவும் செல்வந்தராகவுமிருந்ததால் அவர்களின் செல்வத்தில் பெரும் பகுதி இஸ்லாத்தின் வளர்ச்சிக்காகவே செலவிடப்பட்டது.

மலக்குகளே அவருடன் நாணத்துடன் நடந்து கொள்வதாக நபி (ஸல்) அவர்கள் கூறுமளவு வெட்க சுபாவமுடைய அவர்கள் முழு ஸஹாபாக்கள் மத்தியிலும் அபூபக்ர், உமர் (றழி) ஆகியோருக்கடுத்த அந்தஸ்தில் நோக்கப்படுமளவு சிறப்பு வாய்ந்தவர்களாக மதிக்கப் பட்டார்கள்.

இஸ்லாத்திற்காக தன்னை அர்ப்பணித்த அவர்களுக்கு குறைஷிக் காபிர்களும் மதிப்பளித்துள்ளனர் என்பதனைப் பின்வரும் நிகழ்வு எமக்கு எடுத்துக்காட்டுகின்றது. அதாவது ஹிஜ்ரி ஆறாம் ஆண்டில் நபி (ஸல்) அவர்களும் ஸஹாபாக்களும் மக்காவுக்கு உம்றாவுக்காகச் சென்று குறைஷியர் தடுத்து நிறுத்திய போது, உண்மையை எடுத்து விளக்கி சமரசம் செய்யும் பொறுப்பில் அன்னாரையே நபி (ஸல்) அனுப்பி வைத்தார்கள். குறைஷிக் காபிர்கள் எவ்வேளையும் எதனையும் செய்யக்கூடும் என்ற அச்சம் நிலவிய சூழலிற் கூட தனது உயிருக்கு முக்கியத்துவம் கொடுக்காது இஸ்லாத்தையே முதன்மைப் படுத்தி அப்பணியைப் பொறுப்பேற்றார்கள்.

தனது செல்வத்தை இஸ்லாத்திற்காக வாரி இறைப்பதில் ஆர்வமுடன் காணப்பட்ட உஸ்மான் (றழி) அவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் தமது பங்களிப்பினை வழங்கியுள்ளார்கள். உதாரணமாக: பொருளாதாரம் மிக நெருக்கடி நிலையிலிருந்த போது நபியவர்களால் மேற்கொள்ளப்பட்ட ‘‘கஷ்டப்படை’’ எனப் பெயரிடப்பட்ட படையைத் தயார் செய்வதற்கு ஆயிரம் தீனார்களை ரொக்கமாகவும், யுத்தத்திற்கு தயார்செய்யப்பட்ட தொள்ளாயிரத்து ஐம்பது ஒட்டகங்கள் மற்றும் ஐம்பது குதிரைகள் ஆகியவற்றையும் இன்னும் பல பொருட்களையும் கொடுத்துதவினார்கள், சில அறிவிப்புக்களின் பிரகாரம் அப்படையின் செலவினங்களில் மூன்றிலொரு பகுதியை உஸ்மான் (றழி) அவர்கள் மட்டுமே தனித்து வழங்கினார்கள் எனத் தெரியவருகிறது. அது மட்டுமல்லாது மதீனாவில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டு யூதர்கள் அதனைச் சாதகமாகப் பயன்படுத்த முற்பட்டவேளை பெருந்தொகைப் பணம் கொடுத்து ‘‘பி:்ரு றூமா’’ என்ற கிணற்றினை வாங்கி முஸ்லிம் களுக்காக அன்பளிப்பு செய்தார்கள்.

அவ்வாறே மஸ்ஜிதுன் நபவீயை ஏனைய இரு கலீபாக்களதும் காலத்தில் விஸ்தரிக்கப் பட்டதை விடவும் மிகக் கூடுதலாக விஸ்தீரணம் செய்ததோடு அதன் கட்டிட மூலப் பொருட்களிலும் அக்காலத்திற் பெறுமதிமிக்கதும் நீண்ட காலம் நிலைத்திருக்கக் கூடியதுமான மூலப்பொருட்களைப் பயன்படுத்தினார்கள்.

இவை தவிர இஸ்லாத்தைப் பாதுகாக்கும் பணியில் பல்வேறு மட்டங்களிற் பங்களிப்புச் செய்த அன்னவர்கள் நபி (ஸல்) அவர்களுக்குப் பக்கத்திலிருந்து வஹீ எழுதும் பணியிலும் ஈடுபட்டுள்ளதுடன் பிற்காலத்தில் அல்-குர்ஆனை ஓதுவதில் முஸ்லிம்கள் மத்தியில் ஏற்பட்ட சிக்கல்களைத் தீர்த்து வைப்பதற்காக அபூபக்ர் (றழி) அவர்கள் காலத்துத் தொகுப்பின் அடிப்படையிற் பல பிரதிகள் செய்து முழு முஸ்லிம் தேசங்களுக்கும் அனப்பிவைத்து அந்த குழப்ப நிலையை இல்லாமற் செய்தார்கள்.

அதுமட்டுமல்லாது இஸ்லாத்தைக் கடல்கடந்து கொண்டு செல்ல வேண்டும் அதற்காக கப்பற்படை தேவை என்பதை கவர்னர் முஆவியா (றழி) அவர்கள் எடுத்துரைத்த போது அதற்கான முழு அங்கீகாரமும் ஒத்தாசையும் வழங்கினார்கள். இந்நடவடிக்கையே இஸ்லாம் மத்திய தரைக்கடலையும் கடந்து ஐரோப்பாக் கண்டத்தினுட் பிரவேசிக்கவும் பிற்காலத்தில் கொன்ஸ்தான்திநேப்பிள் கைப்பற்றப்பட்டு ஓர் இஸ்லாமிய சாம்ராஜ்யத்தின் தலைநகராக மாறியமைக்கும் அத்திவாரமாக அமைந்தது என்றால் அது மிகையல்ல.

இவ்வாறு சமய சமூக சேவையாற்றிய உஸ்மான் (றழி) அவர்கள் அரசியல் ரீதியிலும் இஸ்லாமிய உலகுக்குப் பாரிய பல பங்களிப்புக்களைச் செய்துள்ளார்கள். கலீபா உமர் (றழி) அவர்கள் நயவஞ்சக பாதகனால் தாக்கப்பட்டு இறுதி நிலையை எய்திய போது முஸ்லிம் சமூகம் தனக்குப் பின்னால் பிளவுபட்டு விடக்கூடாது என்பதில் மிகவும் கரிசனையுடன் செயல்பட்டார்கள். அந்த வகையில் அன்றைய முஸ்லிம் சமுதாயத்தின் மத்தியில் செல்வாக்குப் பெற்றும், நபி (ஸல்) அவர்களால் சுவர்க்க வாக்குறுதி வழங்கப் பெற்றவர்களுமான உஸ்மான், அலீ, தல்ஹா, ஸுபைர், அப்துர்றஹ்மானிப்னு அவ்ப், ஸஃத் இப்னு அபீவக்காஸ் ஆகிய அறுவரையும் தெரிவு செய்து அவர்களுள் ஒருவரை கிலாபத் பணியை பொறுப்பேற்குமாறு வஸிய்யத் செய்து விட்டு தனது உலகவாழ்விலிருந்து விடைபெற்றார்கள். பல கட்ட ஆலோசனைகளின் பின் கலீபாவாக பைஅத் செய்யப்பட்ட கலீபா உஸ்மான் (றழி) அவர்கள், ஏனைய அரசியற் பணிகளுடன் முன்சென்ற இரு கலீபாக்களாலும் முன்னெடுக்கப்பட்ட இஸ்லாமிய விரிவாக்கற் பணிகளை மிகச் சிறப்பாக முன்னெடுத்தார்கள். அந்த வகையில்:

அலெக்சாந்திரியா, எகிப்தின் தென்பகுதிகள், தூனிஸிய்யா, மொரோக்கோ போன்ற வட ஆபிரிக்கப் பகுதிகளையும் வெற்றி கொண்டு இஸ்லாமிய நிர்வாகத்தின் கீழ்க் கொண்டு வந்தன இஸ்லாமியப் படைகள். இது தவிர மத்திய தரைக்கடல் நாடாகிய ஸைப்ரஸும் கலீபா உஸ்மான் (றழி) அவர்கள் காலத்திலேயே இஸ்லாமிய சாம்ராஜ்யத்தின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது. இவை தவிர இன்னும் பல பாரஸீக பிராந்தியங்களையும் கலீபாவின் ஆட்சிக்காலத்தில் இஸ்லாமியப் படையணியினர் தமது கட்டுப்பாட்டினுட் கொண்டு வந்தனர்.

இவ்வாறு பரந்து விரிந்ததொரு சாம்ராஜ்யத்தை தனது நிர்வாகத்தின் கீழ்க் கொண்டு வந்திருந்த கலீபா அவர்கள் காலத்தின் தேவை பொருத்தப்பாட்டுக்கேற்ப சில மாற்றங்களை நிர்வாகத்தில் ஏற்படுத்தினார்கள். அதன் மூலம் இஸ்லாத்திற்கும் முஸ்லிம்களுக்கும் நன்மை செய்வதே கலீபாவின் எண்ணமாயிருந்தது. ஆனபோதிலும் இஸ்லாமிய சாம்ராஜ்யத்தினதும் முஸ்லிம்கள் மீதும் தொடரான காழ்ப்புக் கொண்டிருந்த யூதர்கள் எவ்வாறாயினும் தமது திட்டங்களை நிறைவேற்றிக்கொள்ள தீவிர திட்டம் தீட்டினார்கள்.

முஸ்லிம் வேடம் பூண்டு இஸ்லாமிய உலகின் தூரப் பகுதிகளில் தனது விஷமப் பிரச்சாரத்தை மேற்கொண்ட அப்துல்லாஹிப்னு ஸபஃ. என்ற யூத நயவஞ்சகன் விரித்த சதி வலையில் அடிப்படை தெரியாத நாட்டுப்புற புதிய முஸ்லிம்கள் சிக்கிக் கொண்டனர்.

அவர்களைப் பகடைகளாகப் பயன்படுத்திய இப்னு ஸப.்.. கலீபாபை கொலை செய்து விடுவதில் வெற்றி கண்டான்.

கிளர்ச்சியாளர்களின் நிபந்தனைகளை ஏற்றுத் தனது உயிரைக் காப்பாற்றிக் கொள்ள வாய்ப்பிருந்தும் நபி (ஸல்) அவர்கள் முற்கூட்டியே கூறிவைத்ததற்கிணங்க: அநியாயக் காரர்கள் அல்லாஹ்வால் உமக்கு அணிவிக்கப்பட்ட ஓர் ஆடையைக் கழற்றி விடுமாறு உம்மைக் கோரினால் நீர் அதற்கு உடன்பட்டுவிடாதே, என்னுடன் வந்து சேர்ந்து கொள்ளும் வரை பொறுமையைக் கடைப்பிடிப்பீராக! எனக் கூறியிருந்தார்கள்.

இதனால் தான் ஷஹீதாக்கப்படும் வரை நபியவர்களின் வாக்கில் அசையா நம்பிக்கையுடன் இருந்து ஹிஜ்ரி 35ஆம் வருடம் இஸ்லாத்திற்காகவும் முஸ்லிம் தேசத்திற்காகவும் தமதுயிரைத் தியாகம் செய்தார்கள் மூன்றாம் கலீபா உஸ்மான் (றழி) அவர்கள்.

### 4. அலீ (றழி) அவர்களும் சமய சமூகத்திற்கான அவர்களது பணிகளும்:

நபி (ஸல்) அவர்களின் தந்தையின் சகோதரர்களில் ஒருவரான அபூதாலிப் என்பவருக்கு இளைய மகனாகப் பிறந்த அலீ (றழி) அவர்கள் தனது பால்ய வயதிலிருந்தே நபியவர்களின் அரவணைப்பில் வளர்ந்து வந்தார்கள். நபி (ஸல்) அவர்களுக்கு நுபுவ்வத் பொறுப்பு வழங்கப்பட்டபோது அலீ அவர்கள் பத்து வயது சிறுவனாயிருந்தார்கள். ஆயினும் தனது சகோதரர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீது அளவில்லாத மதிப்பும் பாசமும் கொண்டிருந்த அவர்கள் எவ்வித தயக்கமுமின்றி முதற்கணத்திலேயே இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள் இதன் மூலம் இஸ்லாத்தில் நுழைந்த முதற் சிறுவன் எனும் சிறப்பினைப் பெறுகிறார்கள்.

சிறுபராயம் முதலே நபி (ஸல்) அவர்களோடு ஒன்றாக வாழ்ந்த காரணத்தால் ஆரம்ப முதலே இஸ்லாமியப் பணியிலும் சமூகப் பணியிலும் நபி(ஸல்) அவர்களுடன் பங்கேற்கும் வாய்ப்பினைப் பெற்றார்கள்.

ஹிஜ்றத்தின் முன்னர் மக்காவில் நபி (ஸல்) அவர்களது பிரச்சாரப் பணிகளுக்கு ஒத்தாசை புரிந்த அலீ (றழி) அவர்கள் ஹிஜ்றத்தின் போது மாபெரும் தியாகமொன்றினை இஸ்லாத்திற்காக மேற்கொண்டார்கள். அதாவது பெரும் எண்ணிக்கையான குறைஷிக் காபிர்கள் நபி(ஸல்) அவர்களைத் தீர்த்துக்கட்டிவிடும் முடிவுடன் நபி (ஸல்) அவர்களது வீட்டை முற்றுகையிட்டபோது, நபியவர்களுக்குப் பதிலாக அவர்களது இடத்தில் உறங்குவதற்கு எவ்விதத் தயக்கமுமின்றி முன்வந்தார்கள். குறைஷியர் எவ்வேளையும் வீட்டினுட் புகுந்து கண்மூடித்தனமாக ஒருமித்துத் தாக்கினால் பல துண்டங்களாக தான் வெட்டப்பட நேரிடும் என்ற ஆபத்தான கட்டத்தில் அன்னவர்களின் துணிச்சலான இம்முடிவு இஸ்லாத்தின் பாலும் அதன் தூதர் பேரிலும் அன்னார் கொண்டிருந்த அதீத பற்றினை எடுத்துக் காட்டுகின்றது.

மிகுந்த பலசாலியாகவும் சிறந்த குதிரை வீரராகவும் காணப்பட்ட ஸெய்யிதினா அலீ (றழி) அவர்கள் ஹிஜ்றத்தின் பின்னர் இஸ்லாத்தின் பாதுகாப்புக்கும் இஸ்ரத்திற்குமான அனைத்துப் போர்களிலும் கலந்து தனது ஒப்பற்ற ஆற்றல்களையும் வீர முழக்கங்களையும் இஸ்லாத்திற்காக மேற்கொண்டார்கள். எத்தகைய பலமிக்க எதிரியாயினும் அவனது சவாலை ஏற்று முன்சென்று தாக்குவதில் தனித்துவம் பெற்றிருந்த அலீ (றழி) அவர்கள் அல்லாஹ்வின் சிங்கம் என நபி (ஸல்) அவர்களால் புகழப்படுமளவு தனது ஆற்றல்களை இஸ்லாமியப் போராட்டங்களில் வெளிப்படுத்தினார்கள்.

பிற்காலங்களில் இஸ்லாத்திற்கெதிரான சவால்களாக முஸ்லிம் உலகிலும் அதன் வெளியிலும் தோற்றம்பெற்ற பல இயக்கங்களைக் கட்டுப்படுத்தி இல்லாதொழித்தார்கள். அறிவில் சிறந்து விளங்கிய அலீ (றழி) அவர்கள் தமது விவேகத்தை ஞானத்தையும் இஸ்லாத்திற்காக செலவிட்டார்கள். சிறந்த மார்க்கத்தீர்ப்புக்களை வழங்கிய இவர்கள் நீதிபதியாகவும் செயற்பட்டுள்ளார்கள். தனக்கு முன்வந்த அனைத்து கலீபாக்களதும் ஆலோசனை சபைகளில் முக்கிய உறுப்பினாராகப் பணியாற்றிய அவர்கள் மிகத் துல்லியமாகவும் பொறுப்புடனும் ஆலோசனைகளும் ஒத்தாசையும் புரிந்து இஸ்லாத்தைப் பாதுகாப்பதிலும் நல்லாட்சி புரிவதிலும் உறுதுணையாய் செயலாற்றியுள்ளார்கள்.

மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் முஸ்லிம்களின் தலைமைப் பொறுப்பினை ஏற்றுக் கொண்ட அலீ (றழி) அவர்கள் பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் இஸ்லாத்தையும் அதன் பணியாளர்களையும் போஷித்துப் பாதுகாப்பும் சுபீட்சமும் வழங்குவதிற் பின் நிற்கவில்லை.

**அல் அஷறதுல் முபஷ்ஷறாஹ்** வாழ்வும் முன்மாதிரிகளும்:

நபி (ஸல்) அவர்கள் தமது வாழ்நாளிலே பல ஸஹாபாக்களுக்கு பல்வேறுபட்ட சந்தர்ப்பங் களில், அவர்களுக்கு நிச்சயமாக சுவனம் செல்லும் வாய்ப்புக்கிட்டும் என்பதாக உற்சாக மூட்டும் நற்செய்திகளைக் கூறியிருக்கிறார்கள். அவற்றில் சில நற்செயல்களை குறிப்பிட்டுக் காட்டியும், சில குறிப்பிட்ட நிகழ்வுகளுடன் தொடர்புபடுத்தப்பட்டும் காணப்படுகின்றன. உதாரணமாக அபூஹுறைறா (றழி) அவர்களின் காலடி சப்தம் சுவனத்தில் கேட்டதாகக் குறிப்பிட்டுள்ளர்கள், அதே போல் ஹஸன், ஹுஸைன் (றழி) சுவனத்து இளைஞர்களின் தலைவர்கள் எனக் கூறினார்கள், வேறொரு தடவை பாத்திமா (றழி) அவர்களைப் பார்த்து சுவனத்தில் பெண்களின் தலைவி எனக் குறிப்பிட்டார்கள்.

இவ்வாறே முஸ்லிம்களுக்கு குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டபோது பி∴று றூமாவை வாங்கிக் கொடுப்பவருக்கு சுவனத்தை வாக்களித்தார்கள், அதேபோல் கஷ்டகாலத்து படை தயார் செய்வதில் பங்கேற்போருக்கு சுவனம் கிடைப்பதாக வாக்குறுதி வழங்கினார்கள், அதே போல் பத்ர் யுத்தத்திற் கலந்து கொண்ட அனைத்து ஸஹாபாக்களுக்கும் ஆயுட்கால பாவமன்னிப்பை அல்லாஹ் முற்கூட்டியே வாக்களித்திருந்தான். இவ்வாறு இன்னும் பல உதாரணங்களைக் குறிப்பிடலாம். இவற்றை மையமாகக் கொண்டு நோக்கும் போது பலநூறு ஸஹாபாக்கள் சுவர்க்கத்திற்கான தகுதியை முற்கூட்டியே பெற்றிருந்தனர் என்பது தெளிவாகின்றது. எவ்வாறாயினும் ஸஹாபாக்கள் அனைவரும் சுவனம் செல்லத் தகுதியானவர்களே என்பதை அன்னவர்கள் இஸ்லாத்திற்காக சிந்திய இரத்தங்களும் செய்த தியாகங்களும் மிகத் தெளிவாக விளக்குகின்றன, ஆயினும் மறைஞானமும், இறுதித் தீர்மானமும் அல்லாஹ்வுக்கு மட்டுமேயுள்ள உரிமை என்பதும் இங்கு நினைவிற் கொள்ளப்பட வேண்டும்.

இவ்விதமிருக்க ‘‘அஷறதுன் முபஷ்ஷறாஹ்’’ சுவர்க்கத்திற்கான சுபசோபனம் கூறப்பட்ட பத்து ஸஹாபாக்கள் என குறிப்பிட்ட சிலரை மட்டும் ஏன் வரலாற்றில் சிலாகித்துக் கூறப்படுகின்றது என்ற விடயம் விசேடமாக நோக்கப்பட வேண்டியதொன்றாகும். அதாவது இஸ்லாத்தின் ஆரம்ப நாட்களிலேயே அதனை ஏற்று அங்கீகரித்து அதற்காகவே தமது அத்தனை விடயங்களையும் அர்ப்பணித்த அந்த தோழர்களின் பெறுமானத்தை அன்று தொடக்கம் இவ்வுலக முடிவுவரையுமுள்ள இஸ்லாமிய சமூகம் அறிந்து அதன் மூலம் படிப்பினையும் வழிகாட்டலும் பெறவேண்டும் என்பதற்காகவும் நபி (ஸல்) அவர்கள் அவ்வனைவருக்கும் ஒரே சந்தர்ப்பத்தில் ஒருவர் பின் ஒருவராக சுவனத்தின் உரிமைச் சான்றிதழ் வழங்கிக் கௌரவித்துள்ளார்கள். உண்மையில் அந்த நிகழ்வு நடந்தேறிய போது அவர்கள் யாருமே முற்கூட்டி அதனை அறிந்திருக்கவில்லை, மாறாக நபி (ஸல்) அவர்களையே எவ்வேளையும் சுற்றி உலா வந்தவர்களாக இஸ்லாத்தினதும் அதன் தூதரதும் விவகாரங்களின் எப்போதும் பங்கேற்பது போன்று அன்றும் சென்றிருந்தனர். எனவே இப்புண்ணியவான்களை இந்த அந்தஸ்திற்குத் தகுதியானவர்கள் என்பதைத் தீர்மானிக்க இந்நிகழ்வின் பின்னணியே மிகப் போதிய சான்றாகும்.

இனி அந்தப் பத்து ஸஹாபிகளும் யார் என்பதை எடுத்து நோக்கும் போது: கிலாபத் வரிசைப்படி முதன் நான்கு கலீபாக்களும் ஒருவர் பின் ஒருவராக அன்றைய தினம் அந்த இடத்திற்கு சமுகமளித்தார்கள், அந்த வரிசையிலேயே அவர்களது சான்றுகளையும் பெற்றுக் கொண்டார்கள். அதனையடுத்து ஏனைய அறுவரும் அங்கு பிரசன்னமாயினர். குலபாஉர் றாஷிதூன்களின் வாழ்க்கையையும் பணிகளையும் மேலே நோக்கியது போன்று ஏனையவர்களின் வாழ்க்கைக் குறிப்பினையும் முன்மாதிரிகளையும் சுருக்கமாகப் பின்வருமாறு அவதானிக்கலாம்.

### ஸுபைர் இப்னுல் அவ்வாம் (றழி) அவர்கள்:

பதினைந்து வயது பூர்த்தியாகு முன்னரே இஸ்லாத்தின் முதல் ஏழு நபர்களுள் ஒருவராக அதிற் பிரவேசித்த அவர்கள் நபியவர்களின் உயிரே தமது உயிரும் என்பது போல் அன்னார் மீது பாசமுடன் செயற்பட்டார்கள். அபூபக்ர் (றழி) அவர்களின் மகள் அஸ்மா (றழி) அவர்களை மணந்து கொண்ட ஸுபைர் (றழி) அவர்களே இஸ்லாத்திற்காக முதன் முதலில் வாளை உருவியவராகும். ஹபஷா, மதீனா ஹஜ்றத்களில் பங்கேற்ற அவர்கள் பத்ர் தொடக்கம் நபியவர்கள் காலத்து அனைத்துப் போர்களிலும் பங்கேற்றதோடு பிற்காலத்திலும் கலீபாக்களின் படைகளிற் கலந்து பாரிய வெற்றிகளுக்கு காரணமாயிருந்த பிரபல குதிரை வீரராகும். இவரை இஸ்லாத்தின் தூண்களில் ஒன்று என உமர் (றழி) ஒரு முறை புகழ்ந்து கூறிருக்கிறார்கள். பெரும் கொடை வள்ளலான இவர்கள் தனது அனைத்து வருமானங்களையும் அல்லாஹ்வுக்காக தர்மம் செய்பவராகக் காணப்பட்டார். இறுதியில் தனது 67ம் வயதில் ஜமல் யுத்தத்திலிருந்து ஒதுங்கி வெளியேறிச் சென்ற போது ஷீஆக்களைச் சேர்ந்த ஒரு நயவஞ்சகனால் கபடத்தனமாக ஷஹீதாக்கப்பட்டார்கள்.

### ஸ.்.துப்னு அபீவக்காஸ் (றழி) அவர்கள்:

இஸ்லாத்தின் ஆரம்ப உறுப்பினர்களுள் ஒருவரான ஸ.்.த் (றழி) அவர்கள் தனது பதினேழாம் வயதில் இஸ்லாத்தில் நுழைந்தார்கள். அன்றிலிருந்து மார்க்க செயற்பாடுகளில் தீவிர பங்கேற்ற அவர்கள் ஒருமுறை ஒரு கணவாயில் முஸ்லிம்கள் மறைந்து தொழுது கொண்டிருந்த போது மக்கத்து முஷ்ரிக்களில் ஒருவன் தொந்தரவு செய்தான். அதனைத் தவிர்த்துக் கொள்ளுமாறு அவனுக்கு அறிவுறுத்தியும் செவிசாய்க்காமையால், ஸ.்.த் (றழி) இரத்தம் சிந்துமளவு அவனைத் தாக்கி விட்டார்கள். இதுவே இஸ்லாத்தின் பெயரில் சிந்தப்பட்ட முதலாவது எதிரி இரத்தமாகும். ஈட்டி எறிதலில் மிகவும் தேர்ந்திருந்த அவர்கள் இஸ்லாத்தைக் காப்பதற்காக பல்லாயிரம் அம்புகளை குறிப்பாக உகத் யுத்தத்தின் போது எய்துள்ளார்கள். அன்னாரது தியாகங்களைக் கண்டு பூரித்த நபி (ஸல்) அவர்கள் ஸ.்.துடைய துஆக்களை எப்போதும் எற்றுக்கொள்ளுமாறு அல்லாஹ்விடம் விண்ணப்பித்தார்கள் அது ஏற்றுக் கொள்ளப்பட்டது.

நுபி (ஸல்) அவர்கள் காலத்து அனைத்துப் போர்களிலும் கலந்து கொண்டுள்ளதோடு, கலீபாக்கள் காலத்திலும் தமது ஜிஹாதினைத் தொடர்ந்தார்கள். உமர் (றழி) அவர்களால் தளபதியாக நியமிக்கப்பட்ட அவர்கள் பாரஸீகர்களுக்கெதிராகப் பல யுத்தங்களை

மேற்கொண்டு பாரஸீகர்களைத் தோற்கடித்து இறுதியில் வரலாற்றுப் புகழ்பெற்ற காதிஸிய்யாப் போரில் அவர்களது வல்லரசுக்கு சாவுமணி அடித்து பாரஸீகர்களின் கொட்டத்தை அடக்கினார்கள்.

மதாஇனை வெற்றி கொண்டு கிஸ்ராவை வெளியேற்றினார்கள், அத்துடன் கூபா நகரை நிறுவி இஸ்லாமிய ஆட்சிக்கு பலம் சேர்த்தார்கள். கலீபா உமர், உஸ்மான் (றழி) காலத்தில் இறாக்கின் ஆளுநராக நியமிக்கப்பட்டிருந்தார்கள். இவ்வாறு இன்னும் பல மகத்தான சேவைகளை இஸ்லாத்திற்கும் முஸ்லிம்களுக்கும் வழங்கிய ஸஃத் (றழி) அவர்கள் ஹிஜ்ரி 55ல் முஹாஜிர்களில் இறுதியானவராக மதீனாவில் வபாத்தாகி அங்கேயே அடக்கம் செய்யப்பட்டார்கள்.

## அபூ உபைதா ஆமிறிப்னு அப்துல்லாஹ் அல் ஜர்ராஹ் (றழி) அவர்கள்:

இவர்களும் முன்னையவர்கள் போன்று இஸ்லாத்தின் ஆரம்ப நாட்களிலேயே தன்னையும் அதில் இணைத்துக் கொண்டு அதற்காகவே தன்னை அர்ப்பணம் செய்த ஒருவர். ஹபஷா, மதீனா ஹிஜ்றத்களில் பங்கேற்ற இவர்கள் பத்ர் யுத்தம் முதல் நபி (ஸல்) அவர்கள் காலத்து அனைத்து நிகழ்வுகளிலும் பங்கேற்றவர்கள். இஸ்லாத்தின் எதிரியாக பத்ரில் போர் புரிந்த தனது தந்தையைக் தந்தை என்று கூடப் பார்க்காது கொலை செய்த கொள்கைப் பற்றாளர்.

நுபி (ஸல்) அவர்களால் ''அமீனு ஹாதிஹில் உம்மா'' இந்த சமுதாயத்தின் காவலன் எனும் சிறப்புப் பட்டம் பெற்ற அவர்கள் நபியவர்களின் வபாத்தின் பின்னர் இடம் பெற்ற இஸ்லாமிய கிலாபத் விஸ்தரிப்பு நடவடிக்கைகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர்கள். கலீபா உமர் (றழி) அவர்களால் ஷாம் தேசத்திலிருந்த இஸ்லாமியப் படையணியின் தளபதியாக நியமிக்கப்பட்ட இவர்கள் உரோமர்களுக்கெதிராக இடம் பெற்ற மிகப் பிரமாண்டமான யுத்தங்களுக்கு தலைமை தாங்கி இஸ்லாமியப் படையணியை வெற்றியின் பால் வழிநடாத்தினார்கள். இறுதியில் இஸ்லாமியப் படையணியுடனேயே தனது பணிகளை முன்னெடுத்துக் கொண்டிருந்த வேளை கொலரா நோயினால் பீடிக்கப்பட்டு ஹிஜ்ரி பதினெட்டாம் ஆண்டு அல்லாஹ்வின் பாதையிலேயே ஷஹீதானார்கள்.

## தல்ஹா இப்னு உபைதில்லாஹ் (றழி) அவர்கள்:

இவர்களும் இஸ்லாத்தின் ஆரம்ப கால அங்கத்தவராகும். பெரும் செல்வந்தரான இவர்கள் இஸ்லாத்திற்காக தமது செல்வத்தை வாரி இறைத்தது மட்டுமல்லாது இஸ்லாத்திற்காக அனைத்து முக்கிய நிகழ்வுகள் போராட்டங்களிலும் கலந்து கொண்டார்கள். குறிப்பாக உஹத் போரில் நபி (ஸல்) அவர்களைக் காப்பாற்றுவதற்காக சுமார் எழுபதுக்கு மேற்பட்ட காயங்களைத் தாங்கிக் கொண்டு களத்தில் நிலைத்திருந்து நபியவர்களைத் தனது தோள்களில் சுமந்து சென்று பாதுகாத்தார்கள்.

ஜமல் யுத்தத்தின்போது ஆயிஷா (றழி) அவர்களது அணியில் இருந்த போதும் அலீ (றழி) அவர்கள் அன்னாரைச் சந்தித்து நிலைமையை உணர்த்திய போது அதனை ஏற்று குழப்பங்களிலிருந்து ஒதுங்கிச் சென்றார்கள். ஆயினும் மர்வான் அவரைப் பின்தொடர்ந்து அன்னாரை கபடத்தனமாகக் கொலை செய்து விட்டார்.

## அப்துர் றஹ்மான் இப்னு அவ்ப் (றழி) அவர்கள்:

சுபசோபனம் கூறப்பட்டோரில் ஒன்பதாமானராகக் காணப்படும் அப்துர் றஹ்மான் (றழி) அவர்கள் மிகப் பிரபலமான செல்வந்தராகக் காணப்பட்டார்கள். இஸ்லாத்தை ஏற்ற முதல் ஏழு நபர்பளில் ஒருவரான அவர்கள் ஹபஷாவுக்கான ஹிஜ்றத் மற்றும் மதீனா ஹிஜ்றத்திலும் பங்கேற்றார்கள். பத்ர் யுத்தம் முதல் அனைத்து இஸ்லாமியப் போர்களிலும் கலந்து கொண்ட அவர்கள் உஹதின் போது இருபதுக்கு மேற்பட்ட காயங்களுடன் களத்தில் நிலைத்திருந்து போராடினார்கள். இதனால் ஒரு காலில் நிரந்தர வடுவொன்று உண்டாயிருந்தது மட்டுமன்றி பற்களும் சேதமடைந்து அவர்களது பேச்சிலும் குறைபாடு ஏற்பட்டது. இவையனைத்திற்கும் மேலாக கோடீஸ்வரரான அன்னவர்கள் எப்போதுமே செல்வத்தைத் தேக்கிவைக்காது அல்லாஹ்வின் பாதையில் வாரி இறைத்தார்கள். அதாவது மதீனா வாசிகள் அனைவருமே அப்துர் றஹ்மான் (றழி) அவர்களின் செல்வத்தில் பங்காளிகளாகக் காணப்பட்டனர் எனுமளவு தனது செல்வத்தைத் தாராளமயப் படுத்தியிருந் தார்கள்.

அவ்வாறிருந்தும் நபியவர்களின் பாசறையிற் பெற்ற பயிர்ச்சி அன்னாரின் வாழ்க்கையின் வடிவில் மிகத் தெளிவாகக் காணப்பட்டது. அடிக்கடி நோன்பு நோற்பதோடு சாதாரண உணவுகளையே உண்ணுவார்கள். அடிக்கடி தனது ஸகாக்களான ஹம்ஸா, முஸ்அப் (றழி) அவர்களது இறுதி நிலையும் அவர்கள் கபனிடப்பட்ட உடை பற்றியும் குறிப்பிடுவதோடு தனது நிலையை சரி செய்து கொள்வார்கள். அவரைத் தேடி வெளியிலிருந்து வருவோர் பணியாட்களிலிருந்து அவரைப் பிரித்து அடையாளங்காண சிரமப்படுமளவு வேற்றுமையின்றி மிக நெருக்கமாகப் பழகுவார்கள். எவ்வேளையும் தனது செல்வம் தான் சுவனம் செல்வதைத் தாமதமாக்கிவிடக் கூடாது என்பதில் பதட்டமாகவும் விழிப்புடனுமே காணப்பட்டார்கள். பல்லாயிரக் கணக்கில் தீனார்களை அல்லாஹ்வின் பாதையில் செலவிட்டார்கள்.

ஹிஜ்ரி முப்பத்திரெண்டாம் ஆண்டில் வபாத்தான அன்னவர்களுக்குத் தனது அறையில் நபி (ஸல்) அவ்களுடனும் அவர்களது ஏனைய இரு தோழர்களான அபூபக்ர், உமர் (றழி) ஆகியோருக்குமருகில் அடக்கம் செய்து விசேட கௌரவமளிக்க விரும்பினார்கள். ஆயினும் அவர்களது அளவுக்குத் தம்மை உயர்த்திக் கொள்ளத் தயக்கம் காட்டிய அப்துர் றஹ்மான் (றழி) அவர்கள் தனது மற்றுமொரு உற்ற தோழரான உஸ்மானிப்னு மள்ஊன் என்னும் ஸஹாபிக்கருகில் அடக்கம் செய்து விடுமாறு வஸிய்யத் செய்திருந்த பிரகாரம் அவ்வாறே அடக்கம் செய்யப்பட்டார்கள்.

## ஸஈத் இப்னு ஸைத் (றழி) அவர்கள்:

கலீபா உமர் (றழி) அவர்களின் மைத்துணரான ஸஈத் (றழி) அவர்கள் இஸ்லாத்தின் ஆரம்ப அங்கத்தவர்களில் ஒருவராகும். தனது தந்தை ஜாஹிலிய காலத்திலேயே விக்கிரக வணக்கத்திலிருந்து தூரமாகி ஓரிறைக் கொள்கையிலிருந்ததை அறிந்திருந்த அவர்களுக்கு நபி(ஸல்) அவர்கள் போதித்த ஏகத்துவக் கொள்கையை ஏற்றுக்கொள்ள தாமதம் தேவைப்படவில்லை. நுபி (ஸல்) அவர்களுடன் அனைத்துப் போர்களிலும் கலந்து கொண்டார்கள் பத்ரைத் தவிர ஏனெனில் அந்த சந்தர்ப்பத்தில் அவர்கள் தல்ஹா (றழி)அவார்களுடன் நபியவர்களுக்காக உளவுப் பணியில் ஈடுபடவேண்டியிருந்தது.

பேணுதலும் உலகப் பற்றற்ற சிந்தனையும் கொண்ட அவர்களது பிரார்த்தனை உடனே ஏற்றுக்கொள்ளப்படும் சிறப்புத் தன்மை பெற்றிருந்தார்கள். ஒரு முறை அபூ உபைதா (றழி) அவர்கள் ஸஈத் (றழி) அவர்களை சிரியாவின் ஒரு பகுதியின் நிர்வாகத்தை ஒப்படைத்த போது ஜிஹாதை விட்டும் அல்லாஹ்வின் நெருக்கத்திலிருந்தும் என்னை தூரமாக்கப் பார்க்கிறீர்கள் எனக்கூறி அதிலிருந்து விடுபட்டு இஸ்லாமியப் படையுடன் போர்க்களத்துக்கே சென்றுவிட்டார்கள்.

மதீனா சமூகத்தினால் தலைவராக மதிக்கப்படும் அளவு அவர்களது மதிப்பு மக்களிடம் உயர்ந்து காணப்பட்டது. ஹிஜ்ரி 51ல் காலமான அவர்கள் அக்காலய கண்ணியமிக்கவர் களின் பிரசன்னத்துடன் அடக்கம் செய்யப்பட்டார்கள்.

இவ்வாறு மேற்கூறப்பட்ட பதின்மரும் நபியவர்களால் சுவன சான்றிதழ் ஒரே சந்தர்ப்பத்தில் வழங்கப்பெற்றவர்களாகும். இவ்வரிய நற்பேற்றின் பின்னணியை ஆராய்ந்து பார்க்கும் போது அன்னவர்கள் தாம் தெளிவாக விளங்கி உறுதி கொண்ட கொள்கையில் எத்துணை தூரம் விசுவாசம் கொண்டிருந்துள்ளனர். தாம் மதித்த தமது தலைவருக்கு எவ்வளவு மதிப்பும் கௌரவமும் வளங்கியுள்ளனர் அத்துடன் அன்னாரது மறைவின் பின்னரும் அவர்களது பணியைத் தொடர்வதில் எவ்வளவு தூரம் இதய சுத்தியுடன் தொண்டாற்றியுள்ளனர் என்பதை மிகத் தெளிவாக விளங்கிக் கொள்ள முடியும்.

எனவே வல்லவன் அல்லாஹ் இம்மாமனிதர்களுக்கு வாக்களித்ததைப் பார்க்கிலும் மிகச் சிறந்ததை வழங்குவான் என்பதே எமது எதிர்பார்ப்பும் பிரார்த்தனையுமாகும்.

## உம்மஹாத்துல் மூமினீன் வாழ்வும் படிப்பினைகளும்

நபி (ஸல்) அவர்களால் மணமுடிக்கப்பட்ட அன்னவர்களுடன் இணைந்து இஸ்லாத்திற்காக அர்ப்பணிப்புக்களை மேற்கொண்ட அவர்களது மனைவியரை அல்குர்ஆன் மு.்.மின்களின் தாய்மார்களாக பிரகடப்படுத்துகின்றது. இதனால் ஒரு தனிமனிதன் தனது தாய்மீது எவ்வாறு அன்பும் பற்றும கொண்டிருப்பானோ அவ்வாறே நபிகளாரின் மனைவியர் மீதும் பற்றுக்கொள்ளவேண்டும். அதேபோல் அவரவர் தத்தமது தாய்மாருக்கு எத்தகைய கௌரவமும் மதிப்பும் உறவுமுறையும் கொண்டிருப்பரோ அதே வகையான உறவு முறையும் மதிப்பும் அக்கறையும் அன்னவர்கள் மீதும் கொண்டிருப்பது கடமையாகும். இது பற்றி அல்குர்ஆன் குறிப்பிடும் போது: “ நபி (ஸல்) அவர்களுக்குத் தங்களை விடவும் முக்கியத்துவம் கொடுப்பது மு.்.மின்கள் மீது கடமையாகும், அவ்வாறே அன்னவரது மனைவியர் அவர்களுக்குத் தாய்மார்களாகும்…” (அல் அஹ்ஸாப் : 06)

இஸ்லாத்தின் விரோதிகளும் அறிவிலிகளும் நபிகளாரின் பலதார மணத்தினை தத்தமது சூழல், அற்ப சிந்தனைகளுடன் ஒப்பிட்டு தப்பாக சித்தரிப்பதிலும் விமர்சிப்பதிலும் ஈடுபட்டுள்ள போதிலும் அவை அவர்களது அத்துமீறிய நியாயமற்ற கருத்துக்களுக்கப்பால் உயரிய நோக்கமும் சிறந்த பின்னணிகளைக் கொண்டதும் என்பதை உண்மை முஸ்லிம்களும் நடுநிலை சிந்தனையாளர்களும் எவ்விதத் தயக்குமுமின்றி ஏற்றுக் கொள்வர் என்பதும் திண்ணமாகும்.

நபி (ஸல்) அவர்களுடன் திருமணபந்தத்தில் இணைந்த மனைவிமார்களான மு.்.மின்களின் தாய்மார்களைப் பின்வருமாறு சுருக்கமாக அறிமுகம் செய்யலாம்:

### *1. அன்னை கதீஜா (றழி) அன்ஹா அவர்கள்:*

கதீஜா பின்த் குவைலித் எனும் பெயர் கொண்டழைக்கப்பட்ட அன்னை அவர்கள் குறைஷிக் குலத்தில் மிகவும் மதிக்கப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்தவராகவும் செல்வந்த வர்த்தகராகவும் காணப்பட்டார்கள். தனது கணவர் அபீஹாலா அத்தமீமி அவர்கள் மரணித்ததைத் தொடர்ந்து விதவையாகிய அவர்களைத் தனது இருபத்தைந்தாம் வயதில் நபி (ஸல்) அவர்கள் முதற் தாரமாகத் திருமணம் செய்தார்கள். ஒருவரையொருவர் மிகவும் நேசிப்பவர்களாகக் காணப்பட்ட இவர்களுக்கு ஆறு குழந்தைகள் கிடைக்கப் பெற்றன. இவர்கள் இறையடி சேரும் வரை நபி (ஸல்) அவர்கள் வேறெந்தப் பெண்ணையும் திருமணம் செய்திருக்கவில்லை என்பது இவர்கள் பெற்ற விசேட பேறாகும். ஆன்னை ஆயிஷா (றழி) அவர்கள் ஒரு முறை கூறும் போது நபி (ஸல்) அவர்களின் ஏனைய மனைவிமார்களுள் கதீஜா (றழி) அவர்கள் மீது எனக்கேற்பட்ட உரோஷம் போன்று வேறெவர் மீதும் ஏற்படவில்லை, ஏனெனில் அந்தளவுக்கு நபியவர்கள் அவர் பற்றிப் புகழ்பவர்களாகவும் நினைவுகூர்பவர்களாகவும் இருந்தார்கள் எனக் குறிப்பிடுகின்றார்.

இஸ்லாத்தின் முதன் நாளிலேயே முதல் மனிதராக அதனை உளப்பூர்வமாக ஏற்ற அன்னை கதீஜா தனது சொத்துக்கள் செல்வங்களையெல்லாம் இஸ்லாத்தின்

வளர்ச்சிக்காக விரும்பியவாறு செலவிடுமாறு நபி (ஸல்) அவர்களுக்குப் பூரண அங்கீகார மளித்தார்கள். அத்துடன் தனது சக்திக்குட்பட்ட அனைத்து உதவி ஒத்தரசைகளையும் இஸ்லாத்தின் வளர்ச்சிக்காக வழங்கினார்கள். நுபுவ்வத்தின் பத்தாம் வருடம் இவ்வுலகைப் பிரிந்த அன்னையவர்களின் மரணம் நபி (ஸல்) அவர்களுக்கு மிகப் பெரும் துக்கத்தையும் இடைவெளியையும் விட்டுச் சென்றது அதனால் அவர்கள் பின்வந்த நாட்களில் பல்வேறு சோதனைகளை எதிர்கொள்ள நேரிட்டது.

## 2. உம்முல் மூமினீன் ஸவ்தா (றழி) அவர்கள்

ஸவ்தா பின்த் ஸம்ஆ என்று அழைக்கப்படும் அன்னை ஸவ்தா அவர்களும் குறைஷிக் குலத்திற் பிறந்த ஒருவராகும். நுபி (ஸல்) அவர்களின் மக்கா வாழ்வின் போதே இஸ்லாத்தில் இணைந்து கொண்ட இவர்கள் தமது கணவரான ஸக்ரான் இப்னு அம்று என்பவருடன் சேர்ந்து ஹபஷா ஹிஜ்றத்திற் கலந்து கொண்டார்கள். அங்கேயே அவர்களது கணவன் வபாத்தாகி விட்டதால் விதவையாக மாறினார்கள். அன்னை கதீஜா (றழி) அவர்களது வபாத்தின் பின் நபி (ஸல்) மணந்து கொண்ட முதற் பெண்மணி இவர்களே யாகும்.

கூடிய வயதிலேயே நபி (ஸல்) அவர்களுடன் குடும்ப பந்தத்தில் இணைந்த இவர்கள் அன்னை கதீஜா மூலம் நபி (ஸல்) அவர்களுக்குக் கிடைத்திருந்த குழந்தைச் செல்வங்களை வளர்ப்பதிற் பங்கேற்றார்கள். அத்துடன் தனது மரணம் வரை நபி (ஸல்) அவர்களின் மனைவி என்ற பேறுகிடைக்க வேண்டும் என்பதில் மிகவும் ஆவலாயிருந் தார்கள் அதனை நபி (ஸல்) அவர்களும் அங்கீகரித்துத் தனது மரணம் வரை அன்னவர்களைத் தமது மனைவியருள் ஒருவராக தொடர்ந்திருந்தார்கள். அத்துடன் தனது வயோதிபத்தின் காரணமாக ஆண்களின் பக்கம் தமக்கு எவ்வித நாட்டமுமில்லை என்று கூறி தனக்கொதுக்கப்பட்ட நாளைக்கூட ஆயிஷா (றழி) அவர்களுக்காக விட்டுவிட்டார்கள். இவ்வாறு சிறந்த புரிந்துணர்வும் முன்மாதிரியும் கொண்டிருந்த அன்னை ஸவ்தா (றழி) அவர்கள் கலீபா உமர் (றழி) அவர்களது கிலாபத்தின் இறுதிப் பகுதியில் இறையடி சேர்ந்தார்கள்.

## *3. உம்முல் மூமினீன் ஆஇஷா (றழி)*

இவரும் குறைஷிக் குலத்தில் தமீமிக் கிளையைச் சேர்ந்தவராகும், அபூபக்ர் ஸித்தீக் (றழி) அவர்களின் மகளான இவர்கள் நுபுத்துவத்தின் நான்காம் வருடமே பிறந்தார்கள். தனது ஆறாம் வயதில் நபி (ஸல்) அவர்களுக்கு மணமுடித்து வைக்கப்பட்டு ஒன்பதாம் வயதிலேயே அவர்களுடன் குடும்ப வாழ்வில் இணைந்தார்கள். அத்துடன் நபி (ஸல்) அவர்களால் மணந்து கொள்ளப்பட்ட அனைத்து மனைவியருள்ளும் ஒரேயொரு கன்னியாக இவர்களே காணப்பட்டார்கள்.

இயல்பிலேயே மிகச் சிறந்த திறமைகளைக் கொண்டிருந்த இவர்கள் மார்க்க விளக்கங்கள் ஹதீஸ் மனனம் போன்றவற்றில் முன்னணி வகித்தார்கள். அன்னை கதீஜா (றழி) அவர்களையடுத்து நபி (ஸல்) அவர்களின் மிக விருப்பத்திற்குரியவராகக் காணப்பட்டார்.

நயவஞ்சகர்கள் அவர்கள் மீது படுதூறாக கட்டுக் கதையினை அவிழ்த்து விட்ட போது அல்லாஹ் வஹிமூலம் அவர்களது தூய்மையை உறுதி செய்தான். இறுதி வரை நபி (ஸல்) அவர்களது அன்பையும் நம்பிக்கையையும் பெற்றிருந்த அவர்கள் சுவர்க்கத்திற்கான வாக்குறுதியைப் பெற்றிருந்தார்கள், அது மட்டுமல்லாது ஜிப்ரீல் (அலை) அவர்கள் நபியவர்களூடாக இவர்களுக்கு ஸலாமுரைத்துள்ளார்கள். பல சந்தர்ப்பங்களில் நபி (ஸல்) அவர்கள் அன்னையவர்களின் மடியில் சாய்ந்து ஓய்வெடுத்துக் கொண்டிருக்கும் போது வஹி அருளப்பெற்றுள்ளது. அத்துடன் இறுதியாக நபி (ஸல்) அவர்கள் அன்னவரது வாயினால் மென்ற மிஸ்வாக்கினால் பல்துலக்கியதோடு அவரது மடியிலேயே தனது இறுதி மூச்சினை வெளிப்படுத்தினார்கள், அத்துடன் அவர்களது அறையிலேயே நல்லடக்கமும் செய்யப்பட்டார்கள்

இவ்வாறு பல சிறப்பம்சங்களைப் பெற்றிருந்த உம்முல் மூமினீன் ஆஇஷா (றழி) அவர்கள் ஹிஜ்ரி ஐம்பத்தெட்டாம் வருடம் றமழான் மாதம் பிறை பதினேழில் இவ்வுலகைப் பிரிந்தார்கள். ஸெய்யிதினா அபூஹுறைறா (றழி) அவர்களால் தொழுகை நடாத்தப் பெற்று ஜன்னதுல் பகீஇல் அடக்கம் செய்யப்பட்டார்கள்.

## 4. ஹப்ஸா பின்தி உமர் இப்னுல் கத்தாப் (றழி)

இரண்டாம் கலீபா உமர் (றழி) அவர்களின் மகளான இவர்கள் நுபுத்துவம் வழங்கப் படுவதற்கு ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் மக்காவிற் பிறந்தார்கள். அப்துல்லாஹிப்னு உமர் (றழி) அவர்களுக்கு தகப்பன் வழி சகோதரியான இவர்கள் அதிகமதிகம் நோன்பு நோற்பவராகவும் நின்று வணங்குபவராகவும் காணப்பட்டார்கள். மதீனாவில் அவர்களது கணவரான ஹுனைஸ் (றழி) வபாத்தாகி விட்டதால் விதவையான அவருக்கு நபி (ஸல்) அவர்கள் ஹிஜ்ரி மூன்றில் மறுவாழ்வளித்தார்கள். இதனால் இவர்களும் உம்மஹாத்துல் மூமினீன்களின் பட்டியலில் இடம் பிடித்துக் கொண்டார்கள்.

சுவனத்திலும் நபி (ஸல்) அவர்களின் மனைவியாக இருப்பார் எனும் சிறப்பினைப் பெற்ற இவர்கள் மதீனா ஹிஜ்றத், அல்குர்ஆன் மூலப் பிரதியைப் பாதுகாத்தல், அதிகமாக நோன்பு நோற்றல் நின்று வணங்கல் போன்ற பல சிறப்புக்களுக்கும் தகைமை பெற்றிருந்தார்கள்.

இவ்வாறு இஸ்லாத்திற்காக வாழ்ந்த அன்னை அவர்கள் தமது 63ம் வயதில் ஹிஜ்ரி 45ம் வருடம் இவ்வுலகைப் பிரிந்தார்கள்.

## 5. ஸைனப் பின்தி ஹுஸைமா (றழி) அவர்கள்

ஏழைகளின் தாய் ''உம்முல் மஸாகீன்'' எனும் சிறப்புப் பெயர் பெற்ற இவர்கள் அதிகமதிகம் ஏழைகளுக்கு உணவளிப்பவர்களாகக் காணப்பட்டார்கள். இதுவே அவர்களுக்கு இவ்வாறான சிறப்புப் பெயர் கூறப்படுவதற்குக் காரணமாயமைந்தது.

ஊஹுத் போரின் போது அவர்களது கணவர் அப்துல்லாஹ் இப்னு ஜஹ்ஷ் (றழி) ஷஹீதாக்கப்பட்டு விட்டதால் விதவையான அவர்களை நபி (ஸல்) அவர்கள் திருமணம் செய்து அவர்களுக்கு மறுவாழ்வளித்தார்கள்.

சுமார் இரண்டு அல்லது மூன்று மாதங்கள் எனும் குறுகிய காலமே நபி (ஸல்) அவர்களுடன் வாழும் வாய்ப்பினைப் பெற்ற அவர்கள் ஹிஜ்ரி நான்காம் வருடம் வபாத்தாகி விட்டார்கள். நபி (ஸல்) அவர்கள் உயிருடனிருக்கும் போது மரணித்த இரு மனைவியருள் இவர்கள் இரண்டாமவராகும். இதனால் நபி (ஸல்) அவர்களாலேயே ஜனாஸாத் தொழுகை நடாத்தப்படும் பேறினையும் பெற்றுக் கொண்டார்கள்.

## 6. உம்மு ஸலமா ஹின்த் பின்தி அபீ உமைய்யா (றழி) அவர்கள்

மூமின்களின் தாய் எனும் அந்தஸ்துப் பெற்ற உம்ம ஸலமா (றழி) அவர்கள் ஒரு குறைஷிக் குலப் பொண்ணாகும். மிக அழகிய பெண்களில் ஒருவராக வர்ணிக்கப்படும் இவர்கள் தமது கணவர் அபூ ஸலமா (றழி) அவர்களுடன் ஹபஷா, மதீனா ஹிஜ்றத்களில் பங்கேற்றுள்ளார்கள். மதீனாவில் அவர்களது கணவர் வபாத்தாகி விட்டதால் விதவையாகி விட்ட அவரை நபி (ஸல்) அவர்கள் மறுமணம் செய்து வாழ்வளித்தார்கள்.

நபி (ஸல்) அவர்களுடன் உம்றா வணக்கத்திற்காகச் சென்று ஹுதைபிய்யாவில் நிறுத்தி வைக்கப்பட்டோரில் இவர்களும் அடங்கலாகும், தமது உம்றா ஆசை நிறைவேற முடியாது போய்விட்டதால் ஸஹாபாக்கள் மனமுடைந்து காணப்பட்டவேளை நபி (ஸல்) அவர்களது பணிப்புரையை செவிமடுப்பதில் தயக்கம் காட்டினர் இதனால் வேதனையுடன் தன்னிடம் வந்த நபி (ஸல்) அவர்களுக்கு காத்திரமான ஆலோசனை கூறி மிக விவேகத்துடன் அன்றைய பிரச்சினைக்குத் தீர்வினை ஏற்படுத்திக் கொடுத்தார்கள்.

## 7. ஸைனப பின்தி ஜஹ்ஷ் (றழி) அவர்கள்

அஸத் கோத்திரத்தைச் சேர்ந்த தந்தைக்கும் குறைஷிப் பரம்பரையைச் சேர்ந்த தாய்க்கும் பிறந்த ஸைனப் (றழி) அவர்கள் முதலில் நபியவர்களின் வளர்ப்புப் பிள்ளையாயிருந்த ஸைத் (றழி) அவர்களை மணந்திருந்தார்கள். பின்னர் ஸைத் அவர்களிடமிருந்து விவாகரத்துப் பெற்றுக் கொண்டமையால் ஹிஜ்ரி ஐந்தில் அவரது 35ம் வயதில் நபி (ஸல்) அவர்கள் இவரைத் திருமணம் செய்து கொண்டார்கள்.

நேரடியாக அல்லாஹ்வின் உத்தரவின் பேரிலேயே இவர்களது திருமணம் நடைபெற்றதால் இறைவனால் மணமுடித்து வைக்கப்பட்டவர் என்றபெருமையைப் பெற்றதோடு அவர்களது திருமண நிகழ்வினை ஒட்டியதாகவே ஹிஜாப் சம்பந்தமான அல் குர்ஆன் கட்டளையும்

அருளப்பெற்றது. அதிகமதிகம் தர்மம் செய்பவராகவும் பக்குவமுடையவராகவும், மிக்க நேர்மையானவராகவும் காணப்பட்டார்.

ஊங்களில் நீண்ட கரங்களையுடையவரே (அதிகம் தர்மம் செய்பவர்) மறுமைப் பயணத்தில் என்னுடன் முதலில் இணைந்து கொள்வார் என மனைவியரைப் பார்த்து நபி (ஸல்) அவர்கள் கூறியதற்கேற்ப அன்னை அவர்களே முதன் முதலில் நபி (ஸல்) அவர்களை அடுத்து ஹிஜ்ரி 20ம் வருடம் இறையடி சேர்ந்தார்கள்.

## 8. ஜுவைரிய்யா பின்தி ஹாரித் (றழி) அவர்கள்

குஸாஆ கோத்திரத்தினைச் சேர்ந்த இவர்கள் பனுல் முஸ்தலிக் கிளையினருடனான போரில் கைது செய்யப்பட்டு தாபித் பின் கைஸ் என்ற ஸஹாபியின் கனீமத் பங்கில் இடம் பெற்றார்கள். இவரை விடுதலை செய்வதற்கு அந்த ஸஹாபியால் வேண்டப்பட்ட தொகையைத் தன்னால் கொடுக்க வழியில்லை தான் அக்கிளையினரின் தலைவரின் மகள் தனக்குச் சலுகைவேண்டுமென்று நபி (ஸல்) அவர்களிடம் முறையீடு செய்தார்கள். அப்போது நபி (ஸல்) அவர்கள் அத்தொகையினை வழங்கி அவருக்கு உரிமை வழங்கியதோடு அவரை மணந்து கொள்வதற்கான தனது விருப்பத்தையும் வெளிப்படுத்தினார்கள், அதனை மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்ட அவர்கள் இந்நிகழ்வுக்கு மூன்று தினங்களுக்கு முன்னர் மதீனாவிலிருந்து வெளிப்பட்ட ஒரு சந்திரன் தனது மடியினுள் விழுவது போன்று தான் கண்ட கனவு நனவாகிவிட்டதாகப் பெருமையடைந் தார்கள்.

ஹிஜ்ரி 5ம் வருடம் தமது 20ம் வயதில் உம்மஹாத்துல் மூமினீன் பட்டியலில் இணைந்து கொண்ட அன்னை அவர்கள் வணக்க வழிபாடுகளில் மிகவும் ஆர்வமுடனும் அதிக ஈடுபாடும் கொண்டிருந்தார்கள். சுமார் 65 வருடங்கள் இவ்வுலகில் வாழ்ந்த அவர்கள் ஹிஜ்ரி 50ம் வருடம் இவ்வுலகைப் பிரிந்தார்கள்.

## 9. உம்மு ஹபீபா றம்லா பின்தி அபீ ஸுப்யான் (றழி) அவர்கள்

உமைய்யாப் பரம்பரையைச் சேர்ந்த அபூஸுப்யான் (றழி) அவர்களின் மகளான இவர்கள் இஸ்லாத்தின் ஆரம்ப காலத்திலேயே தனது கணவரான உபைதில்லாஹ் இப்னு ஜஹ்ஷ் என்பவருடன் சேர்ந்து முஸ்லிமாகியிருந்தார்கள், அத்துடன் ஹபஷாவுக்கான ஹிஜ்றத்களில் தனது கணவருடன் பங்கேற்றார்கள், இறுதியில் அங்கு தனது கணவன் கிறிஸ்தவனாக மதம் மாறியதால் அவரிடமிருந்து பிரிந்து இஸ்லாத்தில் மிக்க உறுதியுடன் காணப்பட்டார்கள், இதனால் அல்லாஹ்வின் அருளால் மதம் மாறிய கணவனைவிடவும் பன்மடங்கு சிறப்புமிக்க நபி (ஸல்) அவர்களின் மனைவியருள் ஒருவராகவும் மு:.மின்களின் தாய் எனும் சிறப்பினைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு அவர்களுக்குக் கிட்டியது.

தனது தந்தை சகோதரர்களெல்லாம் குறைஷிக்காபிர்களின் முன்னணித் தலைவர்களாகவும் செல்வாக்கு மிக்கவர்களாகவுமிருந்தும் இவர்கள் இஸ்லாத்தின் மீதும் நபி (ஸல்) அவர்கள் மீதும் மிகுந்த பற்றும் பாசமும் கொண்டிருந்தார்கள் என்பதனைத் தெளிவுபடுத்த அவர்கள்

அபிஸீனியாவுக்கு மேற்கொண்ட இரு ஹிஜ்றத்கள், மற்றும் அபூஸுப்யான் இஸ்லாமாவதற்கு முன் சமாதான ஒப்பந்தத்தைப் புதுப்பித்துக் கொள்ள மக்கா வந்த வேளை தனது மகளான அன்னை அவர்களையும் பார்ப்பதற்காக அவரது வீடு வந்தார். அவ்வேளை அவர் நபி (ஸல்) அவர்கள் அமரும் விரிப்பில் உட்கார முனைந்த போது அவசரமாக அதனைச் சுருட்டி எடுத்துக் கொண்டு காபிரான நீங்கள் அல்லாஹ்வின் தூதரின் விரிப்பில் அமர அருகதையற்றவர் எனக் கூறிவிட்டார்கள். இதன் மூலம் தந்தைப் பாசத்தை விடவும் இஸ்லாமும் அதன் தூதரும் முற்படுத்தப்பட்டுள்ளமை தெளிவாகும்.

இவ்வாறு விசுவாசத்தின் கலங்கரை விளக்காகக் காணப்பட்ட அன்னை உம்மு ஹபீபா (றழி) அவர்கள் ஹிஜ்ரி 44ம் வருடம் இவ்வுலகைப் பிரிந்தார்கள்.

## 10. ஸபிய்யா பின்தி ஹுயைய் (றழி) அவர்கள்

கைபர் யுத்தத்தில் யூதர்கள் தோல்வியைத் தழுவிய போது அவர்களிற் பலர் கைதிகளாகப் பிடிக்கப்பட்டனர், அவ்வேளை கணவன் போரிற் கொல்லப்பட்டிருந்த நிலையில் இவர்களும் பிடிக்கப்பட்டிருந்தார்கள். திஹ்யதுல் கலபீ என்ற ஸஹாபியின் கனீமத் பகுதியுள் இடம் பெற்றிருந்த அன்னை ஸபிய்யா அவர்களை உரிமையளித்து விடுதலை செய்வதற்கு அந்த ஸஹாபி ஒரு தொகை பணத்தினை நிர்ணயம் செய்திருந்தார், அதனைச் செலுத்தி உரிமை பெற்றுக் கொடுத்த நபி (ஸல்) அவர்கள் யூதர்களை ஆற்றுப் படுத்துவதற்காக இவர்களைத் திருமணம் செய்தார்கள்.

நபி (ஸல்) அவர்கள் மீது அதீத பாசம் வைத்திருந்த இவர்கள் நபியவர்கள் இறுதிக் காலப் பிணியினால் வேதனைப்பட்டுக் கொண்டிருந்ததைப் பார்த்து சகிக்கமுடியாது யாறஸூலல்லாஹ் உங்களைப் பீடித்திருக்கும் இவ்வேதனை எனக்கே வந்திருக்கக் கூடாதா என ஆதங்கப்பட்டார்கள். இதனைப் பார்த்த நபி (ஸல்) அவர்கள் ஸபிய்யா உண்மையுரைப்பவர் எனும் சிறப்புப் பட்டம் வளங்கினார்கள். அத்துடன் நபிமார்களின் பரம்பரையிற் தோன்றி ஒரு நபியினைத் திருமணம் செய்து கொண்டவர் என்ற வகையில் இவர்கள் ஏனையவர்களை விடவும் விசேட சிறப்பினைப் பெற்றிருக்கிறார் என நபி (ஸல்) அவர்களே ஒருமுறை இவர்கள் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்கள்.

இவ்வாறு சிறப்புக்களையும் விசேட பண்பாடுகளையும் கொண்டிருந்த அன்னை அவர்கள் ஹிஜ்ரி 52ம் வருடம் இவ்வுலக வாழ்வைப் பிரிந்தார்கள்.

## 11. மைமூனா பின்த் ஹாரித் (றழி) அவர்கள்

நபி (ஸல்) அவர்களைத் திருமணம் செய்வதற்கு முன்னர் ஒருவர் பின் ஒருவராய் இருவரைத் திருமணம் செய்திருந்த இவர்கள் இரண்டாம் கணவர் மரணித்த பின் அப்பாஸ் (றழி) அவாக்ள் மூலமாக நபி (ஸல்) அவர்களுக்கு மணமுடித்துவைக்கப்பட்டார்கள்.

நபி (ஸல்) அவர்களால் மணக்கப்பட்ட இறுதித் தாய் இவர்களேயாகும், ஹிஜ்ரி ஏழாம் ஆண்டு நபி (ஸல்) அவர்கள் தமது உம்றாப் பயணத்தின் போது மக்காவை அண்மிய ஓர் இடத்தில் வைத்தே இவர்களைத் திருமணம் செய்து கொண்டார்கள்.

ஊம்மஹாதுல் மூமினீன்களாகிய ஏனையவர்களுக்குக் காணப்பட்ட சிறப்புக்களும் அந்தஸ்துகளும் இவர்களுக்கும் காணப்பட்டது. நபி (ஸல்) அவர்களால் இவர்களுக்கு பெயர்மாற்றம் செய்யப்பட்டதோடு இவர்களது உறுதியான ஈமான் பற்றியும் சிலாகிக்கப்பட்டது.

ஹிஜ்ரி 51ல் தனது 81ம் வயதில் இறையடி சேர்ந்த அன்னையவர்கள் நபி (ஸல்) அவர்களால் மணமுடிக்கப்பட்டு, இல்லறவாழ்வை ஆரம்பித்த அதே இடத்திலேயே (ஒரு பயணத்தின் போது) வபாத்தாகி அங்கேயே நல்லடக்கமும் செய்யப்பட்டார்கள்.

இவ்வாறு நபி (ஸல்) அவர்களை மணமுடித்துக் கொள்ளும் அரிய வாய்ப்பினைப் பெற்றதால் மனிதகுலத்தின் ஏகதலைவரை மணந்து கொண்ட பேறினையும், அனைத்து மூமின்களதும் தாய்மார் எனும் சிறப்பு அந்தஸ்தினைப் பெற்றிருக்கிறார்கள். இதனாலேயே நபி (ஸல்) அவர்களது வபாத்தின் பின்னர் அவர்களது மனைவிமார்களை வேறெவரும் மணமுடிக்கக் கூடாது என அல்-குர்ஆன் மிகத் தெளிவாகக் கூறிவிட்டது அவ்வாறே அவர்களும் பேணிக்கொண்டார்கள்.